DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
உதயன் சிவராஜா
ROYAL LePAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

Dominion Lending Centres
✓ FIRST MORTGAGE
✓ SECOND MORTGAGE
✓ REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc. Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com
என்னை அழையுங்கள்

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1560 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 27, 2026

## "America and Americans are not Canada's trading enemies, at the same time, China has proven it is no one's ally."

- Canada's Conservative Leader Poilievre

# சீனா யாருடைய கூட்டாளியும் அல்ல ! அதே நேரம். அமெரிக்காவும் அமெரிக்கர்களும் கனடாவின் வர்த்தக எதிரிகளும் அல்ல! – கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லிவ்ரே அழுத்தமாகத் தெரிவிப்பு!

சீனா யாருடைய கூட்டாளியும் அல்ல என்பதை நிரூபித்துள்ள அதே நேரத்தில், அமெரிக்காவும் அமெரிக்கர்களும் கனடாவின் வர்த்தக எதிரி அல்ல. இதை நாங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் கனடாவின் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும். கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவருமான பொய்லிவ்ரே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "எவ்வாறு இருந்தாலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ச்சியாகக் கனடாவைத் தாக்குவது "தவறு" என்றும், கனடாவின் நலன்களை முன்னேற்றுவதற்காக எமது தேசம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை சமாளிப்பதற்காகவும் பிரதமர் மார்க் கார்னியுடன் "ஆக்கபூர்வமாக" பணியாற்ற நான் முன்வருகின்றேன்" என்றும் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே தெரிவித்தார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)



# THAMOR GROUP OF COMAPANIES நிறுவனத்தின் மூன்றாவது கிளை மார்க்கம் நகரில் கோலாகல திறந்து வைக்கப்பெற்றது!

ஏற்கெனவே, மிசிசாகா மற்றும் பிரம்ரன் ஆகிய நகரங்களில் தங்கள் வர்த்தக நிறுவனங்களை நடத்திவரும் **THAMOR GROUP OF COMAPANIES** நிறுவனத்தின் மூன்றாவது கிளை மார்க்கம் நகரில் கடந்த 20-02-2026 அன்று வெள்ளிக்கிழமையன்று **5- 7595 MARKHAM ROAD 0B6** என்னும் விலாசத்தில் கோலாகல திறந்து வைக்கப்பெற்றது!






நிறுவனத்தின் உரிமையாளர்களான திருவாளர் தாமோதரம்பிள்ளை யோகநாதன் மற்றும் அவரது நான்கு புதல்வர்கள் மேற்படி கிளை நிறுவனத்தின் திறப்பு விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். இங்கு பணமாற்றுச் சேவை மற்றும் நகை அடைவ பிடிப்பது போன்ற சேவைகள் உள்ளன.

தொலைபேசி மூலமாக மேற்படி நிறுவனத்தை தொடர்பு கொள்ள 905 667 7200 என்னும் இலக்கத்தை அழைக்கவும்!

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
Water and flood services • Mold remediation • Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231

கனடிய செய்திகள் Canadian News

# THAMOR GROUP OF COMAPANIES நிறுவனத்தின் மூன்றாவது கிளை மார்க்கம் நகரில் கோலாகல திறந்து வைக்கப்பெற்றது!



ஏற்கெனவே, மிசிசாகா மற்றும் பிரம்ரன் ஆகிய நகரங்களில் தங்கள் வர்த்தக நிறுவனங்களை நடத்திவரும் THAMOR GROUP OF COMAPANIES நிறுவனத்தின் மூன்றாவது கிளை மார்க்கம் நகரில் கடந்த 20-02-2026 அன்று வெள்ளிக்கிழமையன்று Unit #5 - 7595 Markham Road, L3S 0B6 என்னும் விலாசத்தில் கோலாகல திறந்து வைக்கப்பெற்றது!

நிறுவனத்தின் உரிமையாளர்களான திருவாளர் தாமோதரம்பிள்ளை யோகநாதன் மற்றும் அவரது நான்கு புதல்வர்கள் மேற்படி கிளை நிறுவனத்தின் திறப்பு விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

அன்றையதினம் பல வர்த்தகப் பிரமுகர்கள், நண்பர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டு தங்கள் ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

அன்றைய தினம் ஒரு விசேட அறிவிப்பாக எதிர்வரும் மார்ச் மாதம் 20ம் திகதி வரை இந்த மார்க்கம் கிளையில் அடைவு வைப்பவர்களில் 1000 டாலர்களுக்கு குறைவான அடைவுத் தொகையைப் பெறுபவர்களுக்கு ஒரு மாத வட்டி அறவிடப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பெற்றது.

தொலைபேசி மூலமாக மேற்படி நிறுவனத்தை தொடர்பு கொள்ள (905) 667-7200 என்னும் இலக்கத்தை அழைக்கவும்!

*- UTHAYAN LJI Journalist Ganesh -*










# Premier Doug Ford Wants to Amalgamate Niagara's 12 Cities and Towns!



## நயாகராவில் 12 நகரங்கள் மற்றும் சிறிய நகரங்கள் அடங்கிய பிராந்தியத்தை 100 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபையாக தரமுயர்ததவுள்ளதாக ஒன்றாரியோ முதல்வர் அறிவிப்பு!

நயாகர பிராந்தியத்தில் உள்ள 12 நகரங்கள் மற்றும் சிறிய நகரங்கள் அடங்கிய பிராந்தியத்தை 100 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபையாக தரமுயர்ததவுள்ளதாக ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்.

இவ்வாறு இணைக்கும் போது ரொறன்ரோவின் 26 வட்டாரங்களை விட 100 நயாகரா நீர்வீழ்ச்சி பிராந்தியம் 100 கவுன்சிலர்களையும் 100 வட்டாரங்களையும் கொண்ட ஒரு நயாகரா நகராட்சியாக மாறி பலம் பொருந்தியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். இந்தப் பிராந்தியம் மக்கள் தொகையில் குறைந்ததாக இருந்தாலும் அதிக வருமானம் கிடைக்கும் மாநாகர சபையாக எழுந்துநிற்கும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

"அதிகமான கேசினோக்களை" ஈர்க்கவும், பரந்து விரிந்த பிராந்தியத்தின் பல வைன் உற்பத்தி செய்யும் ஆலைகள், உணவகங்கள் மற்றும் பிற இடங்களிலிருந்து வரும் ஒவ்வொரு ஆண்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கவும் தனது உத்தியை வெளியிட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு, நிர்வாகத்தை நெறிப்படுத்த வேண்டிய நேரம் இது என்று ∴போர்டு 25ம் திகதி புதன்கிழமை நயாகரா நீர்வீழ்ச்சிப் பிராந்தியத்தில் நடைபெற்ற ஊடகப்பிரதிநிதிகளோடு நடத்திய கலந்தரையாடலில் தெரிவித்தார்.

"நமக்கு அதிகமான அரசியல்வாதிகள் இருப்பதைக் கண்டுபிடிக்க நீங்கள் ஒரு ராக்கெட் விஞ்ஞானியாக இருக்க வேண்டியதில்லை" என்று ∴போர்டு நயாகரா நீர்வீழ்ச்சியில் செய்தியாளர்களிடம் கூறினார். "வட அமெரிக்காவில் ஒரு சிறிய பிராந்தியத்திற்கு இது எங்கும் கேள்விப்படாதது."

அவர் மேலும் தெரிவிக்கையில்: "நாங்கள் நயாகராவை உலகத் தரம் வாய்ந்த இடமாக உருவாக்கப் போகிறோம், மேலும் நாங்கள் பிராந்தியத்துடன் கடினமாகவும் ஒத்துழைப்புடனும் உழைக்கவுள்ளோம். எனவே எமது மாகாணத்தின் வருமானமும் அதிகரிக்கும்".

இணைப்பு தொடர்பான சர்ச்சைக்குரிய பிரச்சினை பல ஆண்டுகளாகக் கொதித்து வருகிறது, ஆனால் இந்த மாத தொடக்கத்தில் அண்மையில் தேர்ந்து எடுக்கப்பறற்ற நயாகரா பிராந்தியத் தலைவர் பாப் கேல் மார்ச் 3 ஆம் தேதிக்குள் வரி செலுத்துவோருக்கு "பணத்திற்கு சிறந்த மதிப்பை" கொண்டு வருவது குறித்து கருத்து கேட்டு 12 மேயர்களுக்கு ஒரு கடிதம் எழுதியபோது ஒரு உந்துதல் ஏற்பட்டது.

ஆட்சி சீர்திருத்தத்திற்கான "அவசரத் தேவை" குறித்து நகராட்சி விவகார அமைச்சர் ராப் ∴பிளாக்கை அணுக திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேற்ப நயாகரா பிராந்தியத்தின் மூன்று பெரிய நகரங்களான நயாகரா நீர்வீழ்ச்சி, செயிண்ட் கேத்தரின்ஸ் மற்றும் வெல்லாண்ட், அதே போல் ∴போர்ட் எரி மற்றும் போர்ட் கோல்போர்ன் போன்ற சிறிய நகரங்களிலிருந்தும் 126 உள்ளூர் கவுன்சிலர்கள் ஒன்றாறியோ முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 124 எம்பிபிகளை விட அதிகமாக தங்கள் பணிகளைச் செய்வார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். நயாகரா பிராந்தியத்தில் சுமார் 500,000 குடியிருப்பாளர்கள் உள்ளனர்.

பெரும்பாலும் குறிப்பிடப்படும் விருப்பங்கள் ஒரு நகரத்திற்குச் செல்வது அல்லது ஏற்கனவே உள்ள நகராட்சிகளை நான்கு நகரங்களாகத் தொகுப்பது - நயாகரா நீர்வீழ்ச்சி, இது நயாகரா-ஆன்-தி-லேக் மற்றும் ∴போர்ட் எரியை உள்வாங்கும், செயிண்ட் கேத்தரின்ஸ், வெல்லண்ட் மற்றும் தோரோல்ட் ஒவ்வொன்றும் தங்கள் சுற்றுப்பாதையில் சிறிய நகராட்சிகளைக் கைப்பற்றும்.

நயாகரா நீர்வீழ்ச்சி நகரத்தின் மேயர் ஜிம் டியோடாட்டி, செயிண்ட் கேத்தரின்ஸ் மற்றும் வெல்லண்ட் மேயர்களுடன் சேர்ந்து, ஒரு வருடம் முன்பு மாகாணத் தேர்தலில் ∴போர்டை ஆதரித்தார், "தற்போதைய அமைப்பு செயல்படவில்லை" என்று பராமரித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு திட்டங்களில் கூடுதல் ஒருங்கிணைப்புக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

"சமையலறையில் நிறைய சமையல்காரர்கள் இருக்கிறார்கள்," என்று அவர் ∴போர்டுடன் கலந்து கொண்டு, 2028 கோடையில் திறக்கப்பட உள்ள 12 மாடி தெற்கு நயாகரா மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு கூறினார்.

சிறிய நகரங்கள் ஏதேனும் மாற்றங்கள் குறித்து மிகவும் கவலை கொண்டதாகத் தெரிகிறது, பெரிய நகராட்சிகளின் ஒரு பகுதியாக உள்ளூர் கட்டுப்பாடு மற்றும் அடையாளத்தை விட்டுக்கொடுக்கும் என்ற அச்சம் மற்றும் செலவு சேமிப்பு குறித்த ஆதாரங்களைத் தேடுகின்றன.

இணைய வழி மூலம் காப்பகப்படுத்தப்பட்டுள்ள இந்த வாரம் ∴போர்ட் எரி கவுன்சில் கூட்டத்தில், மேயர் வெய்ன் ரெடெகோப் கேலை உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்களுக்காக மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

"என்னிடம் அந்தத் தரவு இல்லை," என்று கேல் பதிலளித்தார்.

அடுத்த வார உள்ளீட்டிற்கான காலக்கெடுவைத் தொடர்ந்து மேயர்களிடமிருந்து கூடுதல் கருத்துக்களைக் கேட்க காத்திருப்பதாக ∴போர்டு கூறினார்.

"மேயர் டியோடாட்டி, மற்ற மேயர்கள் மற்றும் பாப் கேல் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

"அவர்கள் இதை முன்வைப்பார்கள், பின்னர் நயாகரா மேயர் தலைமையில் நாங்கள் முடிவெடுப்போம்." என்றும் முதல்வர் டக் போர்ட் தெரிவித்தார்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada

We acknowledge the financial support of the Government of Canada

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் நூல்களின சங்கமம் (நூல் கண்காட்சி) - 2026

காலம் - ஜூன். 21. 2026 - ஞாயிற்றுக்கிழமை
(காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை )
இடம் - தமிழிசைக் கலாமன்றம்
1120 Tapscott Rd Scarborough ON

படைப்பாளிகள் தங்கள் நூல்களை ' நூல்களின சங்கமம்' நிகழ்வில் காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் முடியும். அதற்கான கட்டணம் முப்பது கனடிய டொலர்கள் ($ 30.00) மட்டுமே. அத்துடன் இணைந்ததாக, நூல் அறிமுகம் அல்லது வெளியீடு செய்வதாயின் 30 நிமிடங்கள் தரப்படும். அதற்கான மேலதிக கட்டணம், கனடிய டொலர்கள் நாற்பது ($ 40.00) ஆகும். இந்தக் கட்டணத்துடன் எத்தனை நூல்களையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்யலாம்.

### விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் -- ----------------------------------------

தொலைபேசி எண் -- ----------------------------------------

மின்னஞ்சல் -- ----------------------------------------

நூல்களின் பெயர்கள் -- ----------------------------------------
----------------------------------------
----------------------------------------

அ) காட்சிப்படுத்தல் / விற்பனை ---------------------------- (30$) -------

ஆ) நூல் அறிமுகம் / வெளியீடு ---------------------------- (40$) -------

காட்சிப்படுத்தும் நூல்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாவார்கள். இன, மத முரண்பாட்டை தோற்றுவிக்கும் நூல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்கள் நண்பர்கள் உறவினர் ஊடாக பங்கு கொள்ளலாம்.

படைப்பாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். நன்றி.

அன்புடன்
நிர்வாக சபை - கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்.

தொடர்புக்கு - ரவி கனகசபை ( தலைவர்) - 416 301 9027

உதயன் கதிரோட்டம்

# ஈழத் தமிழர்களின் இன்னல்கலையும் தன் இதயத்தில் சுமர்ந்து வருந்திய ஐயா இரா. நல்லக்கண்ணு அவர்கள் இன்றும் இம் மண்ணில் இருக்கின்றார்!

ஈழத் தமிழர்களாகிய எமக்கு தாயகம் ஈழநாடு என்னும் இலங்கை, அதிலும் வடக்கு கிழக்கும் இணைந்த அந்த “தமிழர் தாயகம்” என்னும் தாய் மணணே எமக்குச் சொந்தமாகிவிடும் என்று நாம் கண்ட கனவு எம்மை விட்டு பிரிந்தது போல .இருப்பினும் எம்மில் பலர் இன்னும் அந்த தாய் மண் உணர்வோடு வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறானவர்கள் உலகெங்கும் உள்ளார்கள். நம் தாயகத்திலும் அந்தப் பற்றோடு இருந்து வருகின்றார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் உள்ளார்கள். எமக்காக தாயகத்தில் ஆயுதம் ஏந்திப் போராடி மடிந்த மாவீரர்களை தங்கள் சொந்தங்கள் என்று கொண்டாடி வருகின்றார்கள். அவர்கள் அனைவருமே இலங்கையில் தமிழர் தாயகம்” என்ற ஒரு அலகு உருவாக வேண்டும் என்று அவாக் கொண்டவர்களாகவே விளங்குகின்றார்கள். அவவாறு. எமது ஈழத் தமிழர்களுக்காகவும் உலகின் எந்தப் பகுதியிலும் முதலாளித்துவத்தாலும் நிலங்களை சூறையாடி தங்கள் சொத்தாக குவித்து வைத்துள்ள ‘நிலச்சுவான்தாரர்களாலும் அடக்கி ஒருக்கப்படுகின்றவர்களுக்காகவும் குரல் கொடுத்தும் வெளியே வந்து போராட்டங்களை நடத்தியும் நூறாண்டைத் தாண்டி வாழ்ந்த “ஒரு சிவப்புப் போராளி” இரா ஐயாக்கண்ணு அவர்கள் தமிழ்நாட்டில் காலமாகிவிட்ட செய்தியறிந்து அந்த பிரிவின் துயரத்தில் மூழ்கிய வண்ணம் இந்தப் பக்கத்தை இவ்வாரம் நாம் வடிக்கின்றோம்.

1925ம் ஆண்டு இம் மண்ணில் உதித்த இரா. நல்லகண்ணும் ஐயா அவர்கள்- 24-02-2026 அன்று தனது போராட்ட வாழ்வைப் பூர்த்தி செய்தார். அவர் இறக்கும் வரையிலும் இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினராக விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

ஆமாம்! எமது தாய்த் தமிழகமான தமிழ்நாட்டில் பிறந்து 101 வயது வரையும் ”போராளி”யாகவே வாழ்ந்து மறைந்த ஐயா இரா. ஐயாக்கண்ணு அவர்களின் மறைவின் பின்னால் மறைந்து கிடக்கும் சில விடயங்களைப் பகிரவும் அவருக்கு எமது ஆழந்த அஞ்சலிகளைச் செலுத்தவுமே இவ்வாரக் கதிரோட்டத்தை நாம் எம் கையில் எடுத்துள்ளோம்.

இவ்வாரப் பதிவிற்கு நாம் இட்டுள்ள தலைப்பு பின்வருமாறு அமைகின்றது என்பதை இந்த பக்கத்தை வாசிக்கத் தொடங்கியபோதே வாசகர்கள் கவனித்திருப்பார்கள். எனினும் “ஈழத் தமிழர்களின் இன்னல்கலையும் தன் இதயத்தில் சுமர்ந்து வருந்திய ஐயா இரா. நல்லக்கண்ணு அவர்கள் இன்றும் இம் மண்ணில் இருக்கின்றார்! என்று நாம் குறிப்பிட்டமைக்கு காரணம் அன்னாரது உயிர் எங்கேயோ எடுத்துச் செல்லப்பெற்றிருந்தாலும் அவரது உன்னதமான உடல் தமிழ்நாட்டில் உள்ள அரச மருத்துவக் கல்லூரி ஒன்றுக்கு தானம் செய்யப்பெற்றுள்ளது என்பதும் நாம் செய்திகள் வாயிலாக அறிந்தவையே! ஆகவே அன்னாரது புனிதமான உடலை எத்தனையோ மருத்துவ மாணவர்கள் தங்கள் கைகளால் தொட்டு உடற்கூறுகள் தொடர்பாக கற்றுக் கொள்ளப்போகின்றார்களோ அதற்கு மேலாக அதனை தரிசிக்கப்போகின்ற சந்தர்ப்பத்தையும் பெறுகின்றார்கள் என்பதும் உண்மையே!

அவரது பிறப்பும் பின்னர் போராட்டங்களோடு பெரும்பகுதியைக் கழித்த ஆண்டுகளும் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு கழித்த கொடுமைகள் நிறைந்த காலங்களும் அதிசயம் நிறைந்தவையாகயே இருந்திருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்கின்றபோது அவரை ஒரு அதிசய மனிதராகவே பார்க்க வேண்டி இருக்கின்றுத.

ஐயா நல்லகண்ணு அவர்கள் அடக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திரமும் உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்று போராடியவர். ஆனால் அவர்கள் தமிழ்நாட்டில் குறிப்பிடப்படுகின்றது போன்று “ஆதிக்கம் நிறைந்த” சாதிவழியில் பிறந்தவர் ஆனால் சாதீயம் என்னும் கொடிய ஆயுதத்தை பிரயோகித்தவர்களுக்கு எதிராகவும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும் தமது குரலை எழுப்பி போராடியவர். மற்றொரு பக்கத்தில் பொருளாதார வளம் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தாலும் வறிய மக்களின் விடிவுக்காகப் போராடியுள்ளார். குறைந்த ஊதியம் பெறுபவர்கள், சாதிக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்கள், தொழிற்சாலைகளில் தங்கள் உழைப்பை உறிஞ்சியும் குறைந்த ஊதியத்தை வழங்கும் முதலாளிகளின் செயற்பாடுகளைக் கண்டித்து உழைப்பாளர்களை ஒன்று திரட்டி போராடியவர் இந்த “ஐயாக்கண்ணு” என்னும் போராளி ஆவார்.

மேலும், எமக்கு வியப்பைத் தரும் விடயங்கள் பல அவர் பற்றிய தகவல்களின் மூலம் தெரிந்துகொள்கையில் வியப்பு இன்னும் மேலிடுகின்றது. அவர் பிறந்த இளைஞனாக இருந்த போது காந்திஜி நேரு போன்றவர்கள் நடத்திய சுதந்திரப் போராட்டம் இந்தியா எங்கும் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது தேதியப் பற்றுள்ள ஒரு இந்தியராகவும் அதேவேளை ஒரு தமிழ் மகனாகவும் சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டார்

இவ்வாறு தீர்க்கமான உள்ளத்துடன் முன்னே சென்று சுதந்திரப் போராட்டங்களில் பங்கெடுத்த காரணத்தால் சிறைக்குள் தள்ளப்பட்டார். ஒரு சுதந்திரத் தாகத்தோடு சிறையில் ஏழு ஆண்டுகள் இருட்டறை வாழ்க்கையை அனுபவித்த ஐயாக்கண்ணு அவர்கள் வெளியில் வந்தபோது நாடு சுதந்திரம் அடைந்திருந்தது. அன்று ஆரம்பித்த அரசியல் பயணம் அவர் தன் உயிரை உடலில் இருந்து பிரிக்கும் வரை தொடர்ந்து கொண்டிருந்ததும் ஒரு “அதிசயம்” அல்லவா?

ஆனால் இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டும் என்று போராடியவர், அந்த சுதந்திரம் கிடைத்த பின்னர் தன்னைச் சுற்றி தொழிலாளர்களும் விவசாயிகளும் நிலச் சொந்தக்காரர்களாலும் முதலாளிகளாலும் அடக்கப்படுவதைப் பார்த்து சில வருடங்களில் தனது தந்தையிடம் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறி இடதுசாரிகளோடு இணைந்து போராடத் தொடங்கினார்..

அப்போது தொழிலாளர்களின் நலன்களுக்காகப் போராடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டபோது நெல்லைச் சதி வழக்கில் கைது செய்யப்பட்டார். சில ஆண்டுகள் இருட்டறை வாழ்க்கை, வெளியில் வந்தார்.‘

தான் சிறைக்குத் தள்ளப்பட்டாலும் சுமார் 25 ஆண்டுகள் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்தார். அந்த காலப்பகுதியில் இவர் வாழ்ந்த சமூகத்தினர் ஐயாக்கண்ணு அவர்கள் தங்களுக்கு எதிராகப் போராடுகின்றார் என்ற காரணத்தால் அவரது குடும்பத்தினரை தங்கள் சமூகத்தின் அனைத்து விடயங்களிலிருந்தும் ஒதுக்கி வைத்திருந்தமை கவனிக்க வேண்ய ஒன்றாகும்

13 ஆண்டுகாலம் இந்திய பொதுவுடமைக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராகவும் இருந்துள்ளார். இந்திய சுதந்திர போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம், கனிமவளக் கொள்ளைக்கு எதிரான போராட்டம் எனத் தனது வாழ்நாளில் குறிப்பிட்ட பகுதியை போராட்டம், சிறை வாழ்க்கை என வாழ்ந்துள்ளார். இதனால் கனிமவளக் கொள்ளையர்கள் பல தடவைகள் இவர் மீது வாகனங்களை ஏற்றி கொலை செய்ய முயற்சித்த சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை தமிழ்நாட்டில் அகதிகளாக தங்கள் வாழ்க்கையைத் தொடரும் ஈழத்தமிழ் உறவுகள் நன்கு கவனிக்கப்பெற வேண்டும் என்று தமிழ் நாட்டின் முதல்வர்களாக விளங்கிய கருணாநிதி மற்றும் அவரது புதல்வர் ஸ்டாலின் ஆகியோரிடம் அடிக்கடி வலியுறுத்தி வந்தவர் ஐயாக்கண்ணு அவர்கள் என்பதும் பேசப்படும் ஒரு விடயமாக உள்ளது என்பதையும் இந்த வேளையில் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனைகள் செய்வோம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை கடல் எல்லையில் வந்து குற்றச் செயலை தொடர்ந்து செய்து வருகின்ற தமிழக மீனவர்கள் நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடுவது எந்த விதத்திலும் நியாயமற்றது

மன்னார் நிருபர்



## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (21-02-2026)

தமிழகத்திலிருந்து இலங்கை கடல் எல்லையில் வந்து தொழில் செய்கின்ற குற்றச் செயலை தொடர்ந்து செய்து வருகின்ற தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இந்தக் குற்றச் செயல்களை செய்து கொண்டு தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடுவது எந்த விதத்திலும் நியாயமற்றது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 21ம் திகதி அன்று சனிக்கிழமை (21-02-2026) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழகத்திலிருந்து இலங்கை கடல் எல்லையான ('Sea of Sri Lanka') கடல் பகுதியை தாண்டி, எமது கரையோரம் வரை வந்து தொழில் செய்கின்ற மீதமிழக னவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

குறிப்பாக காரைக்கால், அதேபோன்று பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள், அவர்களின் 6 படகுகளும், கிட்டத்தட்ட 47 மீனவர்களும் (25 பேர் ஒரு பகுதியாகவும், 22 பேர் ஒரு பகுதியாகவும்) கைது செய்யப்பட்ட நிலையில், தொடர்ச்சியான கைகளை வலியுறுத்தி நாங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து வந்த போதிலும், இந்த கைது என்பது ஒரு பெரிய அளவிலான நடவடிக்கைக்கு ஒரு சிறிய அளவிலான தீர்வைத்தான் அரசாங்கம் எங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக, நூற்றுக்கணக்கான படகுகள் இங்கு எல்லையைத் தாண்டி வருகின்றன. ஆனால், ஓரிரு படகுகள் கைது செய்யப் படுகின்றன என்ற அழுத்தமான எங்களது கோரிக்கைக்கு அவ்வப்போது சில தீனிகளைப் போடுவது போன்று அரசாங்கம் ஓரிரு படகுகளைக் கைது செய்கிறது.

இப்படி கைது செய்கின்ற போதும், அங்கிருக்கின்ற மீனவர்கள் இதனைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் எமது கடல் எல்லைக்குள் வராமல் இருப்பதை தவிர்த்து கொள்வதாக இல்லை.

தொடர்ச்சியாக வருகிறார்கள், கைதும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இருந்தபோதிலும், அவ்வப்போது அவர்கள் இந்த 'Sea of Sri Lanka' கடல் எல்லையைத் தாண்டி வருகின்ற போது கைது செய்யப்படுகின்ற படகுகள் தங்களுக்கு மீண்டும் தரப்பட வேண்டும், மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி உண்ணா விரதங்களையும் ஆர்ப்பாட்டங்களும் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஒன்றை மாத்திரம் இந்த மீனவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தமிழக எல்லையை தாண்டி, இந்திய எல்லையைத் தாண்டி இலங்கை கடல் பகுதிக்குள் நுழைகிறீர்கள். நுழைந்தால் உங்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வார்கள் என்று தெரிந்துகொண்டே ஒரு குற்றச் செயலை செய்கின்றீர்கள்.

குறிப்பாக, ஒரு எல்லை என்பது ஒரு இறையாண்மை என்பது ஒரு நாட்டுக்குரியது. அதைத் தாண்டும்போது ஒரு குற்றச் செயலை தாங்கள் செய்கின்றோம் என்ற ஒரு குற்ற உணர்ச்சி கூட இல்லாமல், வெறுமனே கடல் எல்லையைத் தாண்டும் போதாவது அவர்கள் தாங்கள் இன்னொரு உறவாக இருக்கும் தமிழக மக்கள், இங்குள்ள தமிழ் மக்களின் உரிமையை வைக்கின்றோம். அவர்களின் வாழ்வாதாரத்தை கை வைக்கின்றோம் என்ற எந்த சிந்தனையற்ற வகையிலே எல்லையைத் தாண்டி வருவது மாத்திரமல்லாமல், எமது வளங்களை சூறையாடுவதும், வளங்களை நாசம் செய்வதும், கடல் உபகரணங்களையும் வலைகளையும் சேதப்படுத்துவதுமாக நீண்ட காலமாக செய்து வருகிறார்கள்.

இதனைத் தடுப்பதற்காக நாங்கள் வலியுறுத்தி வருகின்ற போதிலும், அவர்கள் இந்த குற்றச் செயலை தொடர்ந்து செய்து வருகிறார்கள். எனவே, இந்த மீனவர்கள் தொடர்ச்சியாக இந்தக் குற்றச் செயல்களை செய்து கொண்டு தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடுவது எந்த விதத்திலும் நியாயமற்றது.

எனவே தமிழக அரசு, இந்தத் தொழில் முறையை இலங்கை கடல் பரப்புக்குள் எல்லை தாண்டிச் செல்வதை தடுக்க வேண்டும். அதேபோல் மத்திய அரசும் ஒரு நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். இலங்கை கடல் பரப்பு என்பது அவர்களுக்கு இறையாண்மைக்குரியது.

அதில் அவர்கள் செல்லும் போது கைது என்பது தவிர்க்க முடியாதது. ஒரு குற்றச் செயலை செய்துவிட்டு அதை நியாயப்படுத்த யாருக்கும் உரிமையில்லை.

எனவே இந்த கைது என்பது நியாயமானது. அவர்கள் மீண்டும் மீண்டும் வரும்போது இலங்கை கடற்படை கைது செய்யும், கைது செய்யப்பட வேண்டும். அது அவ்வாறல்ல, மீண்டும் தொகையான படகுகள் கைது செய்யப்பட்டு, அவர்களின் வருகை இந்த கடல் பரப்பில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்படும் வரை இந்த கைது நடைபெற வேண்டும் என்பது எமது தெளிவான கோரிக்கையாகும்.

அண்மையில் நாங்கள் யாழ்ப்பாணத்தில் ஊடக மையம் வாயிலாக சில விஷயங்களைத் தெரியப்படுத்திய போது, கடற்றொழில் அமைச்சர் இந்திய மீனவர் விடயத்தில் அசமந்தமாக செயல்படுகிறார், அவரின் செயல்பாடு ஒட்டுமொத்தமாக வட பகுதியில் இருக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும்.

அது தொடர்பாக அவர் மௌனம் சாதிப்பது நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்தை வலியுறுத்தி இருந்தோம்.

அவருக்கு எதிராக இந்தச் செயல்பாடு நிறுத்தப்படாத பட்சத்தில், இந்திய மீனவர்களுக்கு அவர் அழுத்தம் கொடுத்து இந்தப் பிரச்சினையை முடிக்காத வரையில், அவருக்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற கருத்தை அங்கே பதிவு செய்திருந்தோம்.

எனவே இந்திய மீனவர் விடயத்தில் நாங்கள் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை. அவர்களை ஒரு வினாடி தானும் எமது கடல் பரப்பில் அனுமதிக்க முடியாது. இவ்வாறான நிலையில் தொடர்ச்சியாக அவர்கள் கடல் வளத்தை சுரண்டுவதும், ஆதிக்கம் செலுத்துவதும், அதற்கு எதிராக கைது செய்யப்படும் போது போராட்டத்தை முன்னெடுப் எதையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தொடர்ச்சியாக இலங்கை கடற்படை இந்த விடயத்தில் தலையிட்டு, அமைச்சர் அவர்கள் இதில் எந்த அளவுக்கு கவனம் செலுத்துகின்றாரோ, அதேபோல் இலங்கை கடற்படையை நாங்கள் நம்புகிறோம். இந்த கடற்படை தங்களது எல்லையில் சரியான கண்காணிப்பு நடைமுறையில் ஈடுபட்டு, இந்த இந்திய மீனவர் வருகையை முற்றாக நிறுத்த வேண்டும்.

தொடர்ச்சியாக இந்தக் கைது மூலம் தான் எங்களால் இதை நிறுத்த முடியும் என்பது நிச்சயமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் மற்றும் மெசிடோ நிறுவன பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பு



## மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

- எஸ்.ஆர்.லெம்பேட் (24-02-2026)



மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் திரேஸா மகானி (Theresa Mahony) 24ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (24-02-2026) மன்னாருக்கு வருகை தந்த நிலையில், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது இலங்கைக்கான பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் திரேஸா மகானி மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

அதன் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக அவர் கேட்டறிந்தார்.குறிப்பாக வட மாகாண ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் மன்னாரில் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும், காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடி உள்ளதோடு, மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள இராணுவ பொலிஸ் சோதனை சாவடி தொடர்பாகவும், இதனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் இலங்கைக்கான பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார்.



# இலங்கைக்கு வருகை தந்துள்ள கைலாசநந்த் கிரிஜி மஹராஜ் குழுவினர் மன்னார் திருக்கேதீஸ்வரம் திருத்தலத்திற்கு விஜயம் செய்தனர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (24-02-2026)



இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள சுவாமி கைலாசநந்த் கிரிஜி மஹராஜ் தலைமையிலான குழுவினர் 24ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை விசேட உலங்குவானூர்தி மூலம் மன்னாரிற்கு வருகை தந்தனர்.

மன்னார் தள்ளாடி விமான ஓடு தளத்திற்கு வருகை தந்த குறித்த குழுவினர் மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் திருத்தலத்திற்கு விஜயம் செய்தனர்.

சுவாமி கைலாசநந்த்கிரிஜி மஹராஜ் தலைமையிலான குழுவினர் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு கருணானந்த குருக்கள் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர். பின்னர் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டதோடு, ஆலயத்தையும் சுற்றி குறித்த குழுவினர் பார்வையிட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இனப்படுகொலையாளி ராஜபக்சாவின் புதல்வன் நாமல் ராஜபக்ச இங்கிலாந்தில் உரையாற்றுவதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முழுமையான வெற்றி



பிரித்தானியாவின் புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களான கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் யூனியன்களில் (Cambridge & Oxford Unions) இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் இனப்படுகொலையாளி ராஜபக்சாவின் புதல்வனுமாகிய நாமல் ராஜபக்ச உரையாற்றுவதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முழுமையான வெற்றியைப் பெற்றுள்ளன.

இந்தநிலையில் அவருக்கு ஆதரவாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு எதிராகவும் சில ராஜபக்ச ஆதரவாளர்கள் தங்களுடைய கருத்துக்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். எனினும் தமிழ் மக்கள் மட்டுமல்லாது சிங்கள் மக்களும் நாமல் ராஜபக்சவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை முக்கிய விடயமாக பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் ராஜபக்சாவின் குடும்பத்தினருக்கு மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை வங்ரோத்து நிலையை அடைய இருந்தவர்கள், மற்றும் யுத்தத்தை காரணம் காட்டி மக்களை ஏமாற்றியவர்கள் மற்றும் தமிழ் மக்களை அழித்தவர்கள் ராஜபக்சர்கள் என்று அவர்கள் பதிவிடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

நாமல் ராஜபக்சா உரையாற்றவிருந்த மேற்படி நிகழ்வை நடத்த வேண்டாம் என்று ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் யூனியன்களுக்கு 2000ற்கும் மேற்பட்ட மின்னஞ்சல்கள் அனுப்பப் பட்டதாக மிலிந்த ராஜபக்ச என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த நிகழ்வை நடத்துமாறு ஒரு மின்னஞ்சலும் வரவில்லை, அவ்வாறு வந்திருந்தால் மறுபரிசீலனை செய்து பார்த்திருப்பார்கள். என்றும் சிலர் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

தமிழ் மக்களின் நீதிக்கான குரலை ஏற்று கேம்பிரிட்ஜ் யூனியன் ஏற்கனவே பின்வாங்கிய போதிலும், ஒக்ஸ்போர்ட் யூனியன் மௌனம் காத்து வந்தது. ஆனால், தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் லண்டன் மட்டுமன்றி பிரித்தானியாவின் பல தூர இடங்களிலிருந்தும் திரண்டு வந்து பெரும் போராட்டத்தை நடத்தத் தயாரானார்கள். இந்தத் தீவிரமான உணர்வின் விளைவாக, ஞாயிற்றுக்கிழமை இரவு நாமல் ராஜபக்சவின் உரைகள் ரத்து செய்யப்பட்டன என மேற்படி பல்கலைக் கழகங்கள் அறிவித்தன.

பொதுவாக ஒக்ஸ்போர்ட் யூனியன் (Oxford Union) ஒருமுறை அறிவித்த பேச்சுக்கள் அல்லது உரையாடல் நிகழ்வுகளை எந்தக் காரணத்திற்காகவும் ரத்து செய்வதில்லை. கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக் கருதும் அந்த நிறுவனம், நிகழ்வுகளை ரத்து செய்வது தனது புகழுக்கு இழுக்கு என்று கருதுவது வழக்கம்.

இருப்பினும், நாமல் ராஜபக்சவின் குடும்பம் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகள் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளின் தீவிரத்தை உணர்ந்து, மாணவர் சமூகத்தின் கடும் எதிர்ப்பிற்குப் பணிந்து இந்த நிகழ்வை ரத்து செய்துள்ளது. இது ஒரு மிக அரிதான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவாகும்.

நாமல் ராஜபக்சவின் பெற்றோர்கள் மற்றும் அவரின் குடும்பத்திற்குள் அடங்குபவர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சொல்லொண்ணா துயரங்கள் உலகறிந்தவை. அந்தப் பாதகமான செயல்களின் தொடர்ச்சியாகவே இன்றும் ராஜபக்ச குடும்பத்தினர் பார்க்கப்படுகிறார்கள். அத்தகைய ஒரு பின்னணியைக் கொண்டவருக்கு உயரிய மேடைகளை வழங்குவது அறமற்றது என்பதைத் தமிழ் மாணவர் சமூகம் இங்கிலாந்தில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தது.

இந்த வெற்றிக்காகக் களத்தில் நின்ற மாணவர்களுக்கும், இவர்களை ஒருங்கிணைத்த (TYO) தமிழ் இளையோர் அமைப்பினர், தூர இடங்களிலிருந்து பயணப்பட்டு வரத் தயாராக இருந்த பொதுமக்களுக்கும், ஊடகங்களுக்கும், தமிழ் அமைப்புக்களுக்கும், இது தொடர்பாக மின்னஞ்சல்கள் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்ட அமைப்புக்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எதிர்ப்புத் தெரிவித்த அமைப்புகள்: பிரித்தானியத் தமிழ் மாணவர் சங்கங்கள் (Tamil Student Unions of the UK), பிரித்தானியத் தமிழ் இளையோர் அமைப்பு (TYO UK) மற்றும் Tamil Solidarity போன்ற அமைப்புகள் ஒருங்கிணைந்து இந்த எதிர்ப்புகளை முன்னெடுத்தன.

எதிர்ப்பிற்கான காரணங்கள்: ராஜபக்ச குடும்பத்தினர் மீதான போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் அநீதிகளுக்கு நீதி கோரி இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

சிங்களவர்களின் நிலைப்பாடு: இந்தப் பயணத்தின் போது அவர் லண்டன் பௌத்த விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார். அங்கு ஒரு தரப்பு சிங்கள மக்கள் அவருக்கு ஆதரவாக இருந்தபோதிலும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற தளங்களில் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைக்கு ராஜபக்ச குடும்பமே காரணம் எனப் புலம்பெயர்ந்த சிங்களவர்களில் ஒரு பகுதியினரும் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக - TCC-UK (தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரித்தானியா) அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் "எமது தாயக விடுதலைக்காகவும், நீதிக்காகவும் ஒன்றிணைந்து தொடர்ந்து பலமாகப் பணியாற்றுவோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ் – கொக்குவில் இந்த கல்லூரி மாணவர் அனுமதியில் சுற்றுநிருப மீறல் இடம்பெற்றுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு!




யாழ். கொக்குவில் இந்த கல்லூரி இடைநிலை மாணவர் அனுமதியின் போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களை மீறும் வகையில் மாணவர் அனுமதி இடம்பெற்றமை முதற்கட்ட விசாரணைகளில் அவதானிக்கப் பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

குறித்த பாடசாலையில் மாணவர் அனுமதி தொடர்பாக பெற்றோர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த பாடசாலை இடைநிலை மாணவர் ஒருவரின் பாடசாலை அனுமதி தொடர்பில் பெற்றோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டபோது இடைநிலை மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் சுற்று நிருப்பங்களை மீறும் வகையில் பாடசாலை ஆதிபர் செயற்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விடையம் தொடர்பில் வலயக்கல்வி அலுவலகத்திடம் விளக்கம் கேட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எமது பிரதேச சபையின் தீர்மானத்தை ஏற்று அரசு புதிய பயங்கரவாதச் சட்டத்தினை அமுல் படுத்தாமல் விடப்போவதும் இல்லை! பயங்கரவாதச் சட்டத்தினை நீக்கப்போவதுமில்லை!

## நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் அறிக்கை




நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ஆகிய நான் பின்வரும் விடயங்கள் தொடர்பில் என்னுடைய விளக்கத்தினை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

1. நல்லூர் பிரதேச சபையில் மேற்கொள்ளப் பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான தீர்மானம் தொடர்பில்.

அரசாங்கத்தினால் முன்மொழியப் பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரவினை அமுலாக்கம் செய்யக் கூடாது என்றும் தற்போது நடைமுறையில் காணப்படும் பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்க வேண்டும் என்று அண்மையில் நல்லூர் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் கடுமையான எதிர்பிற்கு மத்தியில் தீர்மானம் ஒன்றினை இயற்றியமை தெரிந்த விடயம்.

குறித்த தீர்மானத்தின் மூலம் அரசு புதிய சட்டத்தினை கொண்டுவராமல் விடப்போவதும் இல்லை அதே நேரம் பயங்கரவாதச் சட்டத்தினை நீக்கப் போவதுமில்லை. ஆனால் மக்களினை குரல்வளையை நசுக்குகின்ற இவ்வாறான சட்டங்களுக்கு எதிராக எமது மக்கள் சார்பில் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டியது எமக்கான கடமை.

மேற்படி தீர்மானம் நல்லூர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் குறித்த தீர்மானம் தொடர்பில் நல்லூர் பிரதேச சபையினைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற தேசிய மக்கள் சக்தியின் கௌரவ உறுப்பினர்கள் ஒரு ஊடக அறிக்கையினை வெளியிட்டு இருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பிரசார மேடைகளிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதாக கூறியிருந்தனர். ஆனால் தற்போது அச் சட்டத்தினை விட கொடுமையான பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவினை கொண்டு வருகின்றார்கள்.

இச் சட்டமூலம் பயங்காரவாத சட்டத்தினை விடக் கொடுமையானது என்பது நன்கு கற்றறிந்த சட்டத்தரணிகள் மற்று கல்விபுலன் சார்ந்தோர், ஆய்வாளர்களால் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்ட கருத்தரங்குகளில் மூலம் வெளிக்கொணரப்பட்டது.

அதை விட குறித்த சட்டமூலம் சர்வதேச சட்டங்களுக்கு முரணாக காணப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் கவலை வெளியிட்டதுடன் ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியிருந்தனர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவோம் என்று கூறி ஆட்சிப்பீடம் ஏறிய இவ் அரசாங்கத்தினைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற தேசிய மக்கள் சக்தியின் நல்லூர் பிரதேச சபை கௌரவ உறுப்பினர்கள் அன்றைய சபை அமர்வின் போது நாட்டைப் பாதுகாப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் அவசியம் என்று கூறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தாங்கள் ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்னர் ஒரு கதையும் பின்னர் மறு கதையும் கதைப்பது தொடர்ச்சியாக இந் நாட்டில் இடம்பெற்றுவருகின்ற ஒரு சம்பவம்.

அந்தவகையில் நல்லூர் பிரதேச மக்களின் வாழ்வியல் மற்றும் உட்டுகட்டுமான மேம்பாட்டுக்காக செயற்படுகின்ற நல்லூர் பிரதேச சபை எமது மக்களை ஒடுக்கும் முகமாக கொண்டு வருகின்ற இவ்வாறான சட்டங்களுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் எழுப்பும்.

2. கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் என்மேல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில்.

திருநெல்வேலி பகுதியில் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பர ஒலிபரப்புச் சேவையினை முன்அறிவித்தல் இன்றி நிறுத்தியதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளராகிய என் மேல் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த ஒலிபரப்புச் சேவையினை நிறுத்துமாறு கடந்த வருடம் டிசம்பர் மாதம் சபையில் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு குறித்த தீர்மானம் ஒலிப்பரப்புச் சேவையினை மேற்கொள்ளுபவருக்கு அனுப்பியும் வைக்கப்பட்து. அதற்குப் பின்னரும் குறித்த ஒலிபரப்புச் சேவையினை அவர் தொடர்ந்து கொண்டு வருவதனை கடந்த சபை அமர்வின் போது கௌரவ உறுப்பினர்களினால் சுட்டிக்காட்டிய போது குறித்த நபருக்கு அறிவித்து உரிய நடைமுறைகளைப் பின்பற்றி ஒலிபரப்புச் சாதனங்களை அகற்றுவதற்கு சபை தீர்மானித்தது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை சபை என்னும் ஆராம்பிக்காத நிலையில் குறித்த நபர் நல்லூர் பிரதேச சபைக்கு எதிராக பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். டிசம்பர் மாதம் குறித்த விடயத்தினை நிறுத்துமாறு கோரி இன்று வரை சபைத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்காமல் குறித்த ஒலிபரப்புச் சேவையினைத் தொடருக்கின்ற நபர் மீது தான் நல்லூர் பிரதேச சபை பொலிஸ் முறைப்பாடு செய்ய வேண்டிய நிலையில் குறித்த நபர் என்மீது முறைப்பாடு செய்துள்ளார்.

3. வெளிவாரிப் பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில்.

நல்லூர் பிரதேச சபை வெளிவாரியாக ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்கிய ஊழியர்களுக்கு மிகப் பெரிய தொகையினை வழங்கி வருவதாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் குற்றம்சாட்டி வருகின்றார்கள். வெளிவாரியாக உள்வாங்கப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப் பனவு குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான கொடுப்பனவுத் தொகையினை உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும் உரிய நடைமுறைகளின் பிரகாரம் உயர்த்துவதற்கு கடந்த வருடம் யூன் மாதம் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அத் தீர்மானத்திற்கு அமைய ஆகஸ்ட் மாதத்திலிருந்து குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. குறித்த தீர்மானத்திற்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் ஆதரவளித்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது மீள் சுழற்சி மையங்களில் கழிவுப் பொருட்களினை தரப்பிரிப்பதற்கென மேலதிக ஊழியர்கள் உள்வாங்கப்பட்டமை போன்ற செயற்பாடுகளினால் வெளிவாரி ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற மொத்தக் கொடுப்பனவுத் தொகை அதிகரித்துச் சென்றுள்ளது. ஆனால் யாருக்கும் நல்லூர் பிரதேச சபை தேவையில்லாமல் கொடுப்பனவுகளை வழங்கவில்லை. அவர்கள் செய்கின்ற பணிக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை உரிய முறைப்படி வழங்கி வருகின்றது.

4. சபை அமர்வினைப் பார்வையிடுவதற்கு நல்லூர் பிரதேச சபை கொடுப்பனவு வழங்வதாக கூறப்பட்டமை தொடர்பாக.

தேசிய மக்கள் சக்தியின் கௌரவ உறுப்பினர்கள் சபை அமர்பினை பார்வையிடுவதற்கும் நல்லூர் பிரதேச சபை கொடுப்பனவு வழங்கி வருவதாக பொய்யான தகவலிலைத் தெரிவித்து தங்களை சிறுமைப்படுத்தி யுள்ளவர்கள். அவர்கள் கூறுகின்ற வரதராஜன் பார்த்திபன் என்னும் நபர் வெளிவாரி அடிப்படையில் அலுவலகப் பணியாளராக உள்வாங்கப்பட்டு பணிபுரிகின்றார். அவருக்கான அலுவலகக் கடமையுடன் என்னுடைய தனிப்பட்ட உதவியாளராகவும் கடமை ஆற்றிவருகின்றார். அவர் சபை நடவடிக்கையினை பார்வையிடுவதற்கு நல்லூர் பிரதேச சபை அவருக்கு கொடுப்பனவு வழங்கவில்லை. மாறாக ஏனைய வெளிவாரி பணியாளர்களுக்குரிய நடைமுறைபோல் அவர் தன்னுடைய பணிக்காக நல்லூர் பிரதேச சபைக்கு வரும் நாட்களுக்கு மட்டும் அவருக்கான கொடுப்பனவு நல்லூர் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்றது. குறித்த நபர் நல்லூர் பிரதேச சபையின் கழிவற்றலினை மேம்படுத்துவதற்குரிய ஜி.பி.எஸ் வசதிகளை ஏற்படுத்தல், வாகனங்களின் வழித்தடங்களை தினசரி ஆராய்ந்து அறிகையிடல், வாகன வழித்தடங்களை வரைதல், வட்டார வரைபடத்தினை வரைதல் மற்றும் இலத்திரனியல் மயப்படுத்தல், கண்காணிப்பு கமராக்கள் தொடர்பான விடயங்கள், எனக்கு வருகின்ற விடயங்களினை ஆவணப்படுத்துதல். நல்லூர் பிரதேச சபையின் தரவுகளினை ஒழுங்கமைத்தல் அதனை தரவுத் தளம் ஒன்றின் ஊடாக பேணுதல், நல்லூர் பிரதேச சபையின் ஊடகப்பிரிவு முகப்புத்தக தளத்தினை முகாமைத்துவம் செய்தல், என்னுடையதும் எமது கௌரவ உறுப்பினர்களினதும் கடிதங்களை வரைதல், எமது கௌரவ உறுப்பினர்கள் அவ்வப்போது கேட்கின்ற பணிகளினைச் செய்து கொடுத்தல் ஆகிய பணிகளுக்கு மேலதிகமாக அவ்வப்போது என்னாலும் நல்லூர் பிரதேச சபையினாலும் கொடுக்கப்படுகின்ற ஏனைய பணிகள் ஆகிய பணிகளினைச் செய்து வருகின்றார். அதற்குரிய கொடுப்பனவே குறித்த நபருக்கு வழங்கப்படுகின்றதே ஒழிய தேவையில்லாமல் குறித்த நபருக்கு மட்டுமல்ல வேறு எந்த நபருக்கும் நல்லூர் பிரதேச சபை கொடுப்பனவுகளைச் செலுத்தி நிதியினை வீண்விரயம் செய்யவில்லை.

நல்லூர் பிரதேச மக்களின் வாழ்வியல் மற்றும் உட்டுகட்டுமான மேம்பாட்டுக்காக செயற்படுகின்ற நல்லூர் பிரதேச சபை தன்னால் இயன்ற பணிகளினை இயலுமானவரை வினைத்திறனாக செய்து வருகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி,

ப.மயூரன், தவிசாளர் - நல்லூர் பிரதேச சபை



# உடல்நல ரீதியாக டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதிப் பதவிக்கு ஏற்றவர் அல்ல எனவும் அதற்கான தகுதி இல்லாதவர் எனவும் 65 வீதமான அமெரிக்கர்களின் கருத்துத் தெரிவித்துள்ளனர்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் மீண்டும் பதவியேற்ற நாள் முதலாய் அமெரிக்காவில் மாத்திரமல்ல உலக நாடுகள் பலவற்றோடு முரண்பட்டு நடப்பது தொடர்பாக பெரும்பாலான அமெரிக்கர்கள் அதிருப்தியில் உள்ளனர் என புதிய மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக விலை உயர்வு, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு உறவுகள் போன்ற எண்ணற்ற பிரச்சினைகளில் அவர் எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

---

ABC News, The Washington Post மற்றும் Ipsos ஊடக அமைப்புடன் இணைந்து Ipsos KnowledgePanel மூலம் நடத்திய இந்த கருத்துக் கணிப்பு, Supreme Court of the United States ட்ரம்பின் உலகளாவிய சுங்க வரிகளை ரத்து செய்யும் தீர்ப்புக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

---

கருத்துக் கணிப்பின் முடிவுகளின்படி, ட்ரம்புக்கு எதிரான அதிருப்தி விகிதம் சுமார் 60 சதவீதத்தை எட்டியுள்ளது.

பணவீக்கத்தை கையாளும் விதத்தில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி பொருட்களுக்கான சுங்க வரிகள், வெளிநாட்டு கொள்கைகள் மற்றும் குடியேற்ற விவகாரங்களில் கூட அதிகளவில் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு உறவுகள் கையாளப்பட்ட விதத்திற்கு 62% பேர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், குடியேற்றக் கொள்கைகளுக்கு 58% பேர் மற்றும் பொருளாதார மேலாண்மைக்கு 57% பேர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

எந்த ஒரு முக்கிய பிரச்சினையிலும் ட்ரம்ப் தெளிவான மக்கள் ஆதரவைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, காங்கிரஸில் உள்ள ஜனநாயகக் கட்சியினரிடமும் முழுமையான நம்பிக்கை இல்லை என கருத்துக் கணிப்பு காட்டுகிறது.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளை யார் தீர்க்க முடியும் என கேட்கப்பட்டபோது 33% பேர் ட்ரம்பை ஆதரித்துள்ளனர். 31% பேர் ஜனநாயகக் கட்சியை நம்புவதாகவும், மற்றொரு 31% பேர் “யாரையும் இல்லை” எனவும் பதிலளித்துள்ளனர்.

இதன் மூலம் இரு தரப்பினரிடமும் மக்கள் ஏமாற்றத்தில் உள்ளனர் என்பது வெளிப்படுகிறது. Make America Great Again (MAGA) இயக்கத்தை வலுவாக ஆதரிக்கும் குடியரசுக் கட்சியினர் ட்ரம்பின் நடவடிக்கைகளை பெரும்பாலும் ஆதரித்துள்ளனர்.

ஆனால் MAGA-வுடன் இணைக்கப்படாத குடியரசுக் கட்சியினர், குறிப்பாக பணவீக்கம் மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பாக விமர்சனமாக இருந்துள்ளனர். பொருளாதார நிலைமை குறித்த பார்வையும் எதிர்மறையாகவே உள்ளது.

சுமார் பாதி அமெரிக்க வாக்காளர்கள், ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்றதிலிருந்து நிலைமை மோசமடைந்ததாக தெரிவித்துள்ளனர்.

எனினும் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மாத்திரமே பொருளாதாரம் மேம்பட்டதாக கூறியுள்ளனர். 22% பேர் மட்டுமே தங்களது நிதிநிலை முன்னேற்றம் கண்டதாக உணர்ந்துள்ளனர்.

மேலும், ட்ரம்பின் பதவித் தகுதி குறித்த கவலைகளும் எழுந்துள்ளன. பாதிக்கும் அதிகமானோர் அவர் அதிபராக இருக்க வேண்டிய மனத் திறன் இல்லை எனவும், சுமார் பாதி பேர் உடல்நல ரீதியாக அவர் ஜனாதிபதி பதவிக்கு ஏற்றவர் அல்ல எனவும் அதற்கு தகுதி இல்லாதவரம் எனவும் தெரிவித்துள்ளனர்.

---

அத்துடன் ட்ரம் மீது தமக்கு உள்ள நம்பகத்தன்மை தொடர்பாகவும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். பத்து பேரில் ஏழு பேர் ட்ரம்ப் நேர்மையானவர் அல்ல என்றும் நம்பகத்தன்மை இல்லை என்றும் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், அவர் தனது அதிகார வரம்புகளை மீறியுள்ளார் எனவும் பலர் கூறியுள்ளனர்.

---

குழந்தைகளுக்கான தடுப்பூசி பரிந்துரைகளை குறைப்பது மற்றும் பிற நாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த அமெரிக்க இராணுவத்தை பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகளுக்கும் பெரும்பாலானோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த கருத்துக் கணிப்பு அமெரிக்கா முழுவதும் 2,500க்கும் மேற்பட்ட பெரியவர்களிடம் நடத்தப்பட்ட முடிவுகளின்படி, நாட்டில் ஆழமான அரசியல் பிளவு மற்றும் பொதுமக்களின் அதிருப்தி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. எனவும் அறியப்படுகின்றது.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம். பல்கலை புதிய துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவு!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக செயற்பட்டு வருகின்றார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் எதிர்வரும் 25.03.2026 தொடக்கம் பேராசிரியர் தி.வேல்நம்பி துணைவேந்தராக பதவியேற்கவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த செப்ரெம்பர் முதல் வாரத்தில் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில் துணைவேந்தருக்கான தேர்தலில் அதிக புள்ளிகளைப் பெற்று முதன்மை நிலையை வேல்நம்பி பெற்றிருந்தார்.

அத்துடன் கடந்த மூன்று தடவைகள் இடம்பெற்ற துணைவேந்தர் தேர்தலில் வேல்நம்பி முதல் மூன்று ஸ்தானங்களுள் தெரிவாகி இருந்தார்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, பேரவையின் விசேட கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி ஒழுங்கில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்து துணைவேந்தராக நியமனம் செய்வார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களுக்காக அகிம்சை வழி போராட்டங்களை முன்னெடுத்த நல்லக்கண்ணுவின் மறைவுக்கு கஜேந்திரகுமார் எம்.பி இரங்கல்!



அண்மையில் தமிழ்நாட்டில் மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்பூத்த மூத்த பெரும்தலைவர் தோழர் இ.நல்லகண்ணு ஐயா அவர்கள் தனது 101 ஆவது வயதில் தனது மூச்சை நிறுத்திக் கொண்டார் என்ற செய்தி ஈழத் தமிழ் மக்களைப் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது. என இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

2009-ஆம் ஆண்டு தமிழ்த் தேசத்திற்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு (Srilanka State) ஈவிரக்கமற்ற யுத்தத்தை நடத்தித் தமிழினப் படுகொலையை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது தமிழகம் அதற்கெதிராகக் கொந்தளித்தது. அப்போது, தமிழகத்தின் பல்வேறு கட்சிகளையும் ஒருங்கிணைத்து மக்களை ஒன்று திரட்டிப் பெரும் போராட்டங்களை நடத்திய "இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தை" தோற்றுவித்ததில் நல்லக்கண்ணு ஐயா ஆற்றிய பங்கு அளப்பரியது. அதுமட்டுமல்லாது, ஐதராபாத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு நடைபெற்றபோது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியதில் முன்னின்று உழைத்த பெருமகனார் நல்லக்கண்ணு ஐயாவை நாம் இன்று கனத்த இதயத்துடன் நினைவிற் கொள்கிறோம்.

அரசியல் அடக்குமுறைகளுக்கும், பெரும் பண்ணையார்களின் குடியானவர்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கும், சாதியத் தீண்டாமைகளுக்கும் எதிராக எண்ணற்ற பெரும் போராட்டங்களை முன்னின்று நடத்தியமைக்காக ஏழு ஆண்டுகாலம் கொடும் சிறைவாசம் அனுபவித்தவர். சிறைவாசம் அவரது கொள்கை உறுதியை மேலும் புடம் போட்டது. விடுதலையான பின்பு முன்பை விட சமத்துவ சமுதாயம் காண்பதற்கு வேகமாகவும் தீவிரமாகவும் அவர் களப்பணியாற்றியதை உலகத் தமிழர்கள் என்றும் நினைவிற் கொள்வார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக ஒருவர் இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும். ஆனால், நல்லக்கண்ணு ஐயாவின் நேர்மை, எளிமை, உறுதி, தன்னலமற்ற தியாக வாழ்வு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கட்சியின் சட்டவிதியை அகில இந்திய மாநாடு திருத்தியமைத்து அவர் நான்கு முறை பதவி வகிக்க வைத்தது. கட்சியும் மக்களும் அவர் மீது பேரன்பு கொண்டிருந்த நிலையில் அவரால் இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுப் பெரும் பதவிகளைக் கூடப் பெற்றிருக்க முடியும். ஆனால் பதவி-களை பெற்றிடவிரும்பாத பெருந்தகையாளராக வாழ்ந்து மறைந்தார்.

இந்திய மக்களை மாத்திரமல்லாமல் ஈழத்தமிழர்களையும் நெஞ்சிருத்தி வாழ்நாள் பூராவும் செஞ்சூரியனாக ஒளிர்ந்த நல்லக்கண்ணு ஐயாவுக்கு தமிழ்த் தேசியப் பேரவையினராகிய நாம் ஈழத் தமிழ் மக்களின் சார்பில் எமது செவ்வஞ்சலியைச் சிரந்தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கிறோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் MP
தலைவர் - தமிழ்த் தேசியப் பேரவை
தலைவர் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர் - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

# பயங்கரவாத தடைச்சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலி கிழக்கு பிரதேச சபையில் கண்டனத்தீர்மானம்



பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமும் வேண்டாம் புதிதாகக் கொண்டு வரப்படுகின்ற அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

26ம் திகதி அன்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் கொண்டு வந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதில் அரசினால்கொண்டுவரப்படவுள்ள அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கண்டனத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது இந் நாட்டில் மக்களை ஒடுக்குகின்ற மனித உரிமைகளை நிராகரிக்கின்ற காட்டுமிராண்டிச் சட்டம். அச் சட்டம் உள்ளிட்ட மக்களை ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்குகின்ற சட்டங்களை நீக்கவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று புதிய வடிவத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை முன்வைக்கின்றது. அடிப்படையில் இந் நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டதினால் தமிழ் மக்கள் சொல்லெணாத் துயங்களை எதிர்கொண்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் 1978 ஆம் ஆண்டிலிருந்து எம்மை ஒடுக்குவதற்காக மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களால் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்துள்ளது. பொலிசாருக்கும் இராணுவத்திற்கும் அதிக அதிகாரங்களை வழங்குதல் மற்றும் சித்திரவதைகள் ஊடாக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுதல், விசாரணையின்றித் தடுத்துவைத்தல் என அதிகமான அதிகாரங்களை குவித்துள்ள கீழ்த்தரமான சட்டமாகும். இனப்பிரச்சினையுள்ள நாட்டில் இனம்சார் எதிர்ப்புக்கொள்கையை நடைமுறைப்படுத்தவதற்கு அரசாங்கத்திற்கு சட்ட அங்கீகாரமளித்துள்ளது.

பயங்கரவாதம் என்ற வரைவிலக்கத்திற்கு பரந்த அளவில் பொருள்கோடல் வழங்க புதிய சட்டம் முயற்சிக்கின்றது. ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள், ஊடக சுதந்திரம், கைதுசெய்பவர்களை நீதிமன்றங்களின் முன் நிறுத்தாமல் தடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. இந் நிலையில் எமது மக்கள் பிரதிநிதிகள் சபை பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம் மாற்றுச்சட்டமும் வேண்டாம் என தீர்மானத்தினை முன்வைக்கின்றது. தவிசாளரினால் முன்வைக்கப்பட்ட இப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட நிலையில், சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த சகல உறுப்பினர்களும் ஆதரவு அளித்தனர். அதேவேளை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவர் சபையில் இருந்து வெளியேறியதுடன் சபையில் பிரசன்னமாகியிருந்த ஏனைய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இந் நிலையில் 25 வாக்குகளால் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய சகல கட்சிகளினதும் ஆதரவுடன் இப்பிரேரனை நிறைவேறியமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக புத்தூரில் போராட்டம்



அரசினால் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் என சகல அடக்குமுறைச்சட்டங்களையும் உடனே அரசாங்கம் மீளப் பெறவேண்டும் என வலியுறுத்தி புத்தூரில் கறுப்புப் பதாகை ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்புப் பதாகைகளை வீதியில் கட்சிப்படுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை மதியம் புத்தூர் பிரதேச சபையின் முன்பாக தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிரதேச சபையின் உறுப்பினர்கள் அரசு நடைமுறையில் உள்ள 26ம் திகதி வியாழக்கிழமை பயங்கரவாதத் தடைச்சட்டத்தினையும் நீக்கவேண்டும் என கோசம் எழுப்பியதுடன் புதிய அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தினையும் நீக்கவேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான தமிழ் அரசியல்கைதிகளை அரசு விடுகிக்க வேண்டும், அடக்குமுறைச்சட்டங்கள் ஜனநாயக வி-ரோதமானவை என கோசம் எழுப்பினர். மேலும் அநுர அசு தேர்தல் காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குவேன் எனக் கூறி வழங்கிய வாக்குறுதிகள் எங்கே? எனவும் கேள்வி எழுப்பினர்.

இப்போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக கிராமம் கிராமமாக மக்களை சந்திக்கும் நிகழ்வுகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

# போர் விளிம்பில்: அமெரிக்கா – ஈரான் மோதல் மூலோபாய முறிவுப் புள்ளியில்

உலக செய்திகள் World News

## வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் உருவாகி வரும் ரஷ்யா-சீனா-ஈரான் கூட்டு




### வாஷிங்டனில் ஒரு மூலோபாய குறுக்குச் சாலை

2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பதற்றம் மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. ஈரானின் அணுசக்தி மையங்கள், குறிப்பாக நிலத்தடத்தில் ஆழமாக அமைந்துள்ள ஃபோர்டோ (Fordow) தளம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற செய்திகள் சர்வதேச அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க அதிபர் Donald Trump தனது இராணுவத் தலைமைக்குள் பிளவு இருப்பதாக வரும் செய்திகளை "முற்றிலும் தவறானது" என மறுத்துள்ளார். கூட்டுப்படைத் தலைமை ஜெனரல் Daniel Caine (Razin எனவும் குறிப்பிடப்படுகிறார்) ஒரு போர் தவிர்க்க முடியாத நிலைக்கு வந்தால், அமெரிக்கா மிக எளிதாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும், வெடிமருந்து தட்டுப்பாடு, பரப்பளவுக் குறைவு மற்றும் அமெரிக்கத் தளங்களின் பாதுகாப்பு குறித்து பென்டகன் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

### நடவடிக்கை "மிட்நைட் ஹேமர்" மற்றும் நிழல் போர்

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட "ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்" (Operation Midnight Hammer) வெற்றியளிக்கவில்லை. இதைத் தொடர்ந்து, 2003 ஈராக் போருக்குப் பிறகு இல்லாத அளவிற்கு மிகப்பெரிய இராணுவக் குவிப்பை அமெரிக்கா பரப்பியுள்ளது.

- USS ஜெரால்ட் R. ஃபோர்டு மற்றும் USS ஆபிரகாம் லிங்கன் ஆகிய இரண்டு விமானம் தாங்கி கப்பல் குழுக்கள் பாரசீக வளைகுடாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.
- F-22 ராப்டர்ஸ், F-35 ஸ்டெல்த் விமானங்கள், மற்றும் GBU-57 பதுங்கு குழிகளைத் தகர்க்கும் B-2 ஸ்பிரிட் குண்டுவீச்சு விமானங்கள் தயார் நிலையில் உள்ளன.

இந்தப் படையொத்தக் குவிப்பின் நோக்கம் ஈரானின் அணுத்திட்டங்களை அடையாளம் காட்டி அழிக்கவும், உச்சபட்ச அழுத்தத்தை ஏற்படுத்தவும் உள்ளது. ஆனால், இதன் தாக்கம் அமெரிக்கப் படைகள் மீது சமச்சீரற்ற பதிலை ஏற்படுத்தும் அபாயத்தையும் உடையதாக உள்ளது.

### ஈரானின் சமச்சீரற்ற பதில்: ட்ரோன்கள் மற்றும் மின்னணு போர்முறை

ஈரான், "சமச்சீரற்ற போர்முறை" (Asymmetric Warfare) மூலம் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளது.

- 2026 பிப்ரவரி 22 அன்று, பாரசீக வளைகுடாவில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க MQ-4C Triton ட்ரோன் மர்மமாக காணாமல் போனது. இது சுட்டு வீழ்த்தப்பட்டதா அல்லது மின்னணு போர்முறையால் முடக்கப்பட்டதா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

ஈரானின் "Threat Stack" பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- சுயாதீனமாக செயல்படும் ட்ரோன் கூட்டங்கள்
- அமெரிக்கக் கப்பல்களின் ரேடார் மற்றும் GPS அமைப்புகளை சிதைக்கும் மின்னணுத் தாக்குதல்கள்

இவை அனைத்து அம்சங்களும் அமெரிக்க அதிர்ஷ்டத்தைச் சிக்கலாக்கி, தற்காலிக அல்லது நீண்டகால நடவடிக்கைகளில் சிக்கலான சூழலை உருவாக்குகின்றன.

### ரஷ்யா-ஈரான் ஏவுகணை ஒப்பந்தம்: வான் பாதுகாப்பு பலப்படுத்தல்

பிப்ரவரி 2026ல், ரஷ்யா மற்றும் ஈரான் இடையே சுமார் $589 மில்லியன் மதிப்புள்ள ரகசிய ஆயுத ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

- 9K333 ஏநசடிய என்ற அதிநவீன வான் பாதுகாப்பு அமைப்புகள் ஈரானுக்கு வழங்கப்படவுள்ளன.
- 500 ஏவுதளங்கள் மற்றும் 2,500 ஏவுகணைகள் 2027-2029 காலப்பகுதிக்குள் வழங்கப்படவுள்ளன.
- இது ஈரானின் வான் எல்லையை வலுப்படுத்தி, பாரசீக வளைகுடாவில் அமெரிக்காவின் விமானத் தாக்குதலை எதிர்கொள்ள உதவுகிறது.

### சீனாவின் நுழைவு: CM-302 "கப்பல் கொலையாளி"

ஈரான் சீனாவுடன் CM-302 Supersonic anti-ship missile ஏவுகணைகள் வாங்க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

- 290 கி.மீ தூரம் வரை பாயும் திறன்
- அமெரிக்க விமானம் தாங்கி கப்பல்களைத் துல்லியமாகத் தாக்கும் திறன்

இந்த ஏவுகணைகள் அமெரிக்க கடற்படை ஆதிக்கத்திற்கு பெரிய சவாலாக அமையும், மேலும் பாரசீக வளைகுடாவின் நிலையை மாற்றும்.

### ஐரோப்பாவின் எச்சரிக்கை மற்றும் இராஜதந்திரம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் Kaja Kallas தலைமையிலான குழு தீவிரமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

- போர் உருவானால் உலகளாவிய எரிசக்தி சந்தை சீர்குலையும்
- அகதிகள் மற்றும் பொருளாதார பாதிப்புகள் அதிகரிக்கும்
- ஐரோப்பா-அமெரிக்க ஒற்றுமை பாதிக்கப்படும்

ஐரோப்பா, சிரமமான சூழலில் போரினைப் தவிர்க்கும் மார்க்கத்தை வலியுறுத்துகிறது.

### விண்வெளி ஆதிக்கம் மற்றும் "கோல்டன் டோம்"

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் Pete Hegseth விண்வெளியை போர்க்களமாகக் கருதுகிறார்.

- $25 பில்லியன் மதிப்புள்ள கோல்டன் டோம் (Golden Dome) திட்டம்
- விண்வெளியிலிருந்து வரும் ஏவுகணைகளை அழிக்கும் திறன்
- விண்வெளி, தரை, கடல், மின்னணு மற்றும் சைபர் ஆகிய அனைத்திலும் முழுமையான தடுக்கல்

இது அமெரிக்காவின் deterrence கொள்கையை முழுமையாகவும், வலுவாகவும் நிலைநாட்டும் முயற்சியாகும்.

### மகா வல்லரசுகளின் மறுசீரமைப்பு (The Great Power Realignment)

இந்த மோதல் தற்போது பன்முனை உலக ஒழுங்கின் சவாலாக மாறியுள்ளது:

- அமெரிக்கா: உலகளாவிய ஆதிக்கத்தைச் சீர்குலையாமல் பாதுகாப்பு
- ரஷ்யா & சீனா: ஈரானுக்கு இராணுவ ஆதரவு வழங்கி அமெரிக்காவை தடுத்து நிறுத்தல்
- ஈரான்: குறைந்த செலவில் மிக அதிக தாக்கம் ஏற்படுத்தும் சமச்சீரற்ற ரீதியை பின்பற்றுகிறது

### முடிவுரை: விளிம்பில் நிற்கும் உலகம்

வரலாறு கற்றுக் காட்டுகிறது: போர்கள் பெரும்பாலும் வெற்றியை நோக்கியதாக தொடங்கப்படுவதில்லை, மாறாக எதிரியின் பலத்தை தவறாக கணிப்பதால் தொடங்கப்படுகின்றன.

பாரசீக வளைகுடா இனி அமெரிக்காவின் தனிப்பெரும் ஆதிக்கக் களமல்ல இது ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் முறைசார் அரசியலின் அடிப்படையில் உருவாகிய சூழல் மையமான போர் களம் ஆக மாறியுள்ளது.

வாஷிங்டன் எடுக்கப்போகும் அடுத்த முடிவு, ஒரு புதிய உலகப் போருக்கான தொடக்கமா அல்லது அமைதிக்கான இராஜதந்திரமா என்பதை தீர்மானிக்கும்.

**எழுதியவர்: ஈழத்து நிலவன்**
**24-02-2026**

---





# அப்பத்தை எப்படிப் பங்கிடுவது? அப்பத்தை யார் சாப்பிடுவது?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

அண்மையில் தமிழ் நாட்டில், திருச்சியில், சீமான் நடத்திய கூட்டம் ஈழத்தமிழர்கள் மத்தியில் உள்ள சீமானின் ஆதரவாளர்களுக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. அதை ஒரு பிரம்மாண்டமான தமிழ்த் தேசிய வெற்றியாக அவர்கள் போற்றுகிறார்கள்.

அண்மை மாதங்களாக சீமானுக்கும் விஜய்க்கும் ஈழத் தமிழர்கள் மத்தியில் ஆதரவாளர்கள் அதிகரித்து வருகிறார்கள். தமிழகத்தில் சீமானும் விஜயும் ஒருவர் மற்றவருக்கு எதிராகக் காணப்படுகிறார்கள். ஆனால் ஈழத் தமிழர்கள் மத்தியில் அவர்களுக்கு ஆதரவாளர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. கடந்த வாரம் நடந்த சீமானின் கூட்டத்தோடு அவருடைய ஆதரவாளர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்படுகிறார்கள்.

ஈழத் தமிழர்கள் தமிழகத்தைக் கையாள வேண்டும். ஈழத் தமிழ் ராஜிய நடவடிக்கைகளில் அது முதன்மையானது. ஆனால் அது எப்படி என்பதுதான் இங்குள்ள கோட்பாட்டு அடிப்படையிலான கேள்வி. தமிழகத்தில் பல கட்சிகள் உண்டு. அந்தக் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குள் ஈழத் தமிழர்கள் சிக்கக்கூடாது. அது தமிழ்நாட்டு வாக்காளர்களுடைய பிரச்சினை. அதில் ஈழத் தமிழர்கள் தலையிடத் தேவையில்லை. ஈழத் தமிழ் நோக்கு நிலையில் தமிழகத்தில் உள்ள ஈழ அபிமானிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒன்றுதான், தமிழ் நாட்டவர்கள்தான். எனவே தமிழகத்தைக் கையாள்வது என்பது கட்சி பேதங்களைக் கடந்து தமிழக மக்களைக் கையாள்வதுதான். அங்கே காணப்படும் கட்சி முரண்பாடுகளுக்குள் ஈழத் தமிழர்கள் சிக்கக்கூடாது என்பது முக்கிய முன் நிபந்தனை.

சீமானோ, விஜயோ, திமுகவோ, அதிமுகவோ, பாரதிய ஜனதாவோகாங்கிரசோ எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழகத்தில் யார் ஆட்சியைக் கைப்பற்றுகிறார்களோ அவர்களை ஈழத் தமிழர்கள் அணுக வேண்டும். அது தமிழ்நாட்டு அரசு. தமிழ்நாட்டு மக்களின் தெரிவு. அதை ஈழத் தமிழர்கள் மதிக்க வேண்டும். அதைக் கட்சியாகப் பார்க்கத் தேவையில்லை.

அப்படித்தான் புதுடில்லியிலும் இந்திய மக்களால் யார் ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்யப்படுகிறார்களோ அவர்களை அணுக வேண்டும். அதை பாரத அரசாக பார்க்க வேண்டுமே தவிர கட்சியாகப் பார்க்கக் கூடாது. இந்தியாவை, தமிழகத்தை கையாளும்போதும் அணுகும்போதும் இந்தத் தெளிவு மிக அவசியம். அரசுகளைக் கையாள்வது. அதுதான் அரச தந்திரம்.

சமூகவலைத்தளங்களில் ஆளுக்காள் மோதிக் கொள்ளும் ஈழத் தமிழர்களிடம் இந்தத் தெளிவு மிகக் குறைவாக இருப்பதை உணர முடிகிறது. அது மட்டுமல்ல சீமான் திரட்டிய கூட்டத்தைப் பார்த்து வியந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள், தாங்கள் ஒரு தேசமாகத் திரள முடியாமல் இருப்பதைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்?

இங்குள்ள பெரிய கட்சி இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கிறது. ஒருவர் மற்றவரை எப்படித் துரோகி ஆக்குவது என்ற போட்டி. அதேசமயம் இரண்டாவது முக்கிய கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை அரசாங்கத்தின் புதிய யாப்புருவாக்க முயற்சியை நோக்கி குடிமக்கள் சமூகங்களை ஒருங்கிணைத்து வருகிறது. ஒருபுறம் அவர்கள் தமிழகத்தை நோக்கியும் ஐரோப்பாவை நோக்கியும் சென்றார்கள். இன்னொருபுறம் தாயகத்தில் குடிமக்கள் சமூகங்களை நோக்கி வருகிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அவர்கள் முன்னெடுக்கும் எல்லா நகர்வுகளுக்கும் போட்டியாக புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர் ஒருவர் தொடர்ச்சியாகக் காய்களை நகர்த்தி வருகிறார். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள குறிப்பிட்டுச் செல்லக்கூடிய புத்திஜீவிகளில் அவர் ஒருவர். ஒரு காலம் ராஜதந்திரிகளால் ஆர்வத்தோடு பார்க்கப்பட்ட ஆங்கில இணையதளத்தை இயக்கியவர். அவருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான முரண்பாடு கோட்பாட்டு ரீதியிலானதா? ஈகோ சம்பந்தப்பட்டதா? என்ற விவாதத்தை தனியாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த முரண்பாடு தமிழ்த் தேசிய ஆன்மாவின் இதயத்தைத் தாக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு கோட்பாட்டு விளக்கமுடைய இரண்டு தரப்புகளுக்கும் உண்டு.

சில மாதங்களுக்கு முன்பு ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு முன்னணி தாயகத்தில் உள்ள குடிமக்கள் சமூகங்களை ஒருங்கிணைத்து கடிதம் ஒன்றை ஐநாவுக்கு அனுப்பியது. ஆனால் அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட சிறிது காலத்தில் மற்றொரு கடிதம் அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களால் கையொப்பமிடப்பட்டு ஐநாவுக்கு அனுப்பப்பட்டது. இக்கடிதத்தின் பின்னணியில் மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளரே இருப்பதாக முன்னணி குற்றம் சாட்டியது.

அதன் பின் தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்துக்குப் போனது. அங்கே மூத்த ஈழத் தமிழ் உணர்வாளர்களில் ஒரு பகுதியினர் அவர்களைச் சந்திக்க மறுத்து விட்டார்கள். தமிழ்நாட்டு விஜயத்தின்போது, தமிழ்த் தேசியப் பேரவை முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக விமர்சித்து அங்குள்ள ஈழ உணர்வாளர்களில் ஒரு பகுதியினர் அறிக்கையும் விட்டார்கள். மேற்சொன்ன புலம் பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்தான் அதற்கும் பொறுப்பு என்று முன்னணி குற்றம் சாட்டியது.

அதன்பின் தமிழ்த் தேசியப் பேரவை, இரண்டு வாரங்களுக்கு முன்பு மற்றொரு நகர்வை முன்னெடுத்தது. யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மண்டபத்தில் குடிமக்கள் சமூகங்களுடான ஒரு சந்திப்பு அது. அந்தச் சந்திப்புக்கு சரியாக ஒரு நாள் முன்னதாக திருமலையில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. அதுவும் குடிமக்கள் சமூகங்கள் மற்றும் மக்கள் அமைப்புகளுடான சந்திப்பு. அந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தியது திருமலையைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர். அவரை பின்னிருந்து இயக்கியது மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளரே என்று முன்னணி குற்றம்சாட்டியது. திருமலையைச் சேர்ந்த அந்த அரசியல் செயற்பாட்டாளர் முன்பு முன்னணியின் உறுப்பினராக இருந்தவர். இப்பொழுது இல்லை.

திருமலைச் சந்திப்பில் திருமலைப் பிரகடனம் முன்வைக்கப்பட்டது. இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பான கோட்பாட்டு விவாதங்களை அது புதுப்பித்திருக்கிறது. திருமலைச் சந்திப்பைப்போல மற்றோரு சந்திப்பு அதன்பின் மட்டக்களப்பிலும் நடந்தது. அதில் முன்னணியின் செயலாளர், கஜேந்திரன் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்திருந்தார். அவை முன்னணிக்கும் அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிப்பவை.

மேற்சொன்ன புலம் பெயர்ந்த தமிழ்ச் செயல்பாட்டாளர் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான அமைப்புகளை ஒரு மெய் நிகர் சந்திப்பில் ஒருங்கிணைந்திருக்கிறார். இதில் தாயகத்திலிருந்தும் சிலர் கலந்து கொண்டதாக ஒரு தகவல்.நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இந்த மெய்நிகர் சந்திப்பும் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கியதுதான்.

இதில் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் மேற்சொன்ன புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளுக்கும் இடையிலான வேறுபாடு எங்கே இருக்கிறது என்று சொன்னால், கோட்பாட்டு ரீதியாக யார் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை தீவிரமாகவும் விட்டுக்கொடுப்பின்றியும் முன்னெடுக்கிறார்கள் என்பது பற்றியதுதான். அதுபோலவே இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பொறுத்து யார் கோட்பாட்டு ரீதியாக மிகச் சரியான, பொருத்தமான தீர்வை முன்வைக்கின்றார்கள் என்பதுதான்.

ஒருபுறம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் தூதரகங்களை அல்லது வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்திக்கு இழுக்கும் ஒரு நிலைக்கு வந்துவிட்டது. கட்சிகள் தாங்களாக ஒற்றுமைப்படாத ஒரு பின்னணியில், தூதரகங்கள் தலையிட்டு முன்முயற்சி எடுத்தாலும் அதையும் ஒரு கட்சி குழப்புகிறது. இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே எக்கிய ராஜ்யவா? சமஸ்ரியா என்ற வாதப்பிரதிவாதம். இன்னொரு புறம் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஊக்குவிப்போடு, சமஸ்டி வேண்டாம் பொதுஜன வாக்கெடுப்புத்தான் வேண்டும் என்ற கோரிக்கை.

சிறிய ஈழத் தமிழ்ச் சமூகத்தில் நாலில் ஒரு பகுதிக்கும் அதிகமானவர்கள் ஏற்கனவே புலம்பெயர்ந்து விட்டார்கள். புலப்பெயர்ச்சி தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. அனேகமாக எல்லா ஈழத் தமிழ் கிராமங்களும் ஒரு பகுதி ஆளில்லா வீடுகளைக் கொண்ட கிராமங்களாக மாறி வருகின்றன. இளைய தலைமுறையின் ஒரு பகுதி நாட்டில் வேர் கொண்டு பூத்துக் குலுங்குவதை விடவும் நாட்டை விட்டு எப்படித் தப்பி ஓடுவது என்றுதான் சிந்திக்கின்றது. அதாவது தாயகத்தில் சனத்தொகை தொடர்ச்சியாக மெலிந்து வருகிறது.

ஒருபுறம் சனத்தொகை மெலிகிறது. இன்னொருபுறம் இருக்கின்ற ஜனத்தொகையைத் திரட்டுவதற்குக் கட்சிகளால் முடியவில்லை. கட்சிகள் ஒருவர் மற்றவரைத் துரோகியாக்கிக் கொண்டிருக்க, தேசிய மக்கள் சக்தி உற்சாகமாக, எதிர்பார்ப்போடு அனுர குமாரவை தமிழ்மக்கள் மத்தியில் கதா நாயகனாகக் கட்டியெழுப்புகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதேயளவு ஆசனங்கள்தான் அரசாங்கத்துக்கும். இந்த லட்சணத்தில் தீர்வை நோக்கி ஒருங்கிணைய வேண்டிய தமிழ்த் தரப்போ சிதறிக்கொண்டு போகிறது. பலஸ்தீனர்களுக்கிடையிலான அக முரண்பாடுகளை விமர்ச்சிப்பவர்கள் கூறுவார்கள்... "பாலஸ்தீனர்கள் அப்பத்தை எப்படிப் பங்கிடுவது என்று விவாதித்துக் கொண்டிருக்க, யூதர்களோ அப்பத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று. இது ஈழத் தமிழர்களுக்கும் பொருந்துமா?

---

## தமிழ் மொழி (கும்மி)

உலகின் முதன்மொழி ஓங்கு தமிழே!
உயர்ந்த தாயாய் உயர்ந்தவளே!
வலம்வரும் பூமியில் மான்புறு ஓசையாய்
வீச்சாய் மிளிர்கிற மாதே!

வள்ளுவன் தந்த வான்புகழ் குறளை
வாழ்நாள் முழுவதும் ஓதிடவே!
பள்ளிகள் தோறும் படிக்கக் கொடுத்தே!
பாடலாய்ப் பாடிக் காட்டிடுவோம்.

அவ்வையார் அருளிய ஆத்தி சூடியை
ஆர்வமாய்க் கற்றுத் தெளிவோமே!
அவ்வியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவென்று
ஆரம்ப வயதிலே சொல்லிடுவோம்.

தேவாரம் திருமுறை தெளிவாய்க் கற்றுமே!
தினமும் அதனைப் பாடிடுவோம்
ஆவாரம் பூப்போன்ற அழகு தமிழை
ஆனந்த மாகவே கற்றிடுவோம்.

தேனினும் இனிய செந்தமிழ் மொழியை
தேசம் எங்கும் ஒலித்திடவே!
வானிலும் வலம்வர வழிவகை செய்துமே!
வாகை சூடிட வைத்திடுவோம்.

புலம்பெயர் நாட்டில் பரவியே வாழும்
பழம்பெரும் தமிழர் நாமெலாம்
நலமுடன் தமிழை வாழ வைக்கவே!
நம்பிள்ளை நம்மொழி கற்கட்டுமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

உலக தாய்மொழி தினம் February 21

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் வரலாறு படைத்த மருத்துவப் பீட மாணவி நற்குணம் அபிராமி!

## அவர் ஒரு தலைமுறைக்கான முன்மாதிரி



ஈழத் தேசத்தில் வாழும் தமிழர்கள், இளம் தலைமுறையினர், உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழர்கள் பெருமையுடன் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு சிறப்பான செய்தி.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா 19.02.2026 தொடக்கம் 22.02.2026 வரை சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஒரு பொற்கால நிகழ்வாக, ஒரு வரலாற்றுச் சாதனையை உலகிற்கு அறிவித்த தருணமாகவும் மாறியுள்ளது.

19.02.2026 அன்று நடைபெற்ற மருத்துவப் பீட மாணவர்களுக்கான பட்டம் வழங்கிய நிகழ்வில் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரினால் பல தடைவைகள் ஒரு மாணவியின் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்பட்டது, அழைக்கப்பட்டது. "நற்குணம் அபிராமி" என்று அழைத்து பட்டம் கொடுத்த பின் பிறகும் "நற்குணம் அபிராமி" என அழைக்கிறார் இப்படி எட்சு தடவையாக மீள மீள நற்குணம் அபிராமி எனும் பெயர் மண்டபத்தில் ஒலிக்க எல்லோர் விழிகளும் அவளை நோக்கியே குவிந்தது.

ஆம் "நற்குணம் அபிராமி" எனும் மருத்துவ பீட மாணவி தனது மருத்துவ படிப்பின் பல்வேறு துறைகளிலும், அதீத திறமையை வெளிப்படுத்தி மருத்துவ பட்டத்தோடு மட்டுமல்லாமல் ஒரே தடவையில் எட்டு (08) தங்கப்பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டார்.

ஒவ்வொரு முறையும் அந்த பெயர் உச்சரிக்கப்படும் போது, அரங்கில் இருந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டம் பெற வந்திருந்த மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் என அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

மருத்துவப் படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்து MBBS பட்டம் பெற்றதோடு மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளில் அவர் பெற்ற சாதனைகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின.

- மருத்துவப்படிப்பின் அனைத்து கட்டங்களிலும் (Final MBBS) முதலிடம்
- மகப்பேற்றியல் (Obstetrics and Gynaecology)
- சத்திர சிகிச்சை துறை (Surgery)
- குழந்தை நல மருத்துவத் துறை (Paediatrics) போன்ற முக்கிய துறைகளில் விசேட சித்தி.
- மற்றும் மருத்துவ பீடத்திற்கான சிறந்த மாணவருக்கான விருது என பல சிறப்பு துறைகளுக்கான விருது, பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதுவே யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் மருத்துவப் பீட வரலாற்றில், இது வரை நிகழாத ஒரு தனித்துவமான நிகழ்வாகும். பல்வேறு துறைகளில் எட்டு தங்கப் பதக்கங்கள் என்பது ஒரு வரலாற்றுச் சாதனை. ஒரே மாணவரால் அதிக எண்ணிக்கையில் பெறப்பட்ட பதக்கங்களாக இது பதிவாகியுள்ளது.

சாதாரண நடுத்தர குடும்பப் பின்னணியில் இருந்து கல்வியை நோக்கமாகக் கொண்டு முன்னேறிய இவர், தன்னுடைய ஊரான நயினாதீவிற்கும், கல்வி கற்ற பாடசாலைக்கும், பல்கலைக்கழகத்திற்கும் மட்டுமல்லாது முழு இலங்கைக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவரது சாதனையைப் பார்த்து துணைவேந்தர் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்ததுடன், வேந்தரும் தமது ஆச்சரியத்தையும் பாராட்டையும் பதிவு செய்தனர். அத்தோடு நின்று விடாமல் முழு அரங்குமே கைதட்டி தங்களது பாராட்டுக்களை தெரிவித்தனர்.

அதாவது, மருத்துவப் படிப்பிற்குள் நுழைவதே பலருடைய பெரிய கனவு. அதனை வெற்றிகரமாக முடிப்பதே மிகப்பெரிய சாதனை. ஆனால், அதற்குப் பின் ஒவ்வொரு துறையிலும் உச்ச சாதனையைத் தொட்டு, தனித்துறைகளுக்கான சிறப்பு தங்கப் பதக்கங்களைப் பெறுவது அரிதான நிகழ்வு.

சத்திர சிகிச்சை, மகப்பேற்றியல், குழந்தை நல மருத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் சிறந்து விளங்கி, எட்டு பதக்கங்கள் மேடையில் வழங்கப்பட்ட தருணம் அந்த அரங்கில் இருந்த அனைவருக்கும் மறக்க முடியாத நினைவாக மாறியுள்ளது. இன்று இலங்கை முழுவதும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு, பாராட்டப்படும் இந்தச் செய்தி, சாதாரண வெற்றிக் கதை அல்ல இது உழைப்பின், ஒழுக்கத்தின், கல்விப் பற்றின் வெற்றி ஆகும்.

புனிதமான மருத்துவத் துறையைத் தேர்வு செய்து, அதில் வரலாறு படைத்து, "கல்வியால் சமூகம் எவ்வளவு உயரத்திற்கு செல்ல முடியும்" என்பதற்கு அபிராமியின் இச் சாதனை ஒரு சிறந்த உதாரணம் ஆகும். வடக்கு மாகாணத்தில் பெண் கல்வியின் எழுச்சியையும், தொழில்சார் துறைகளில் அவர்கள் காட்டும் ஆளுமைகளையும் இவை பறைசாற்றுகிறது.

மருத்துவப் படிப்பு என்பது சாதாரண கல்வித் தேர்வு அல்ல. குறிப்பாக இலங்கையில், உயர்தர (A/L) பரீட்சையில் மிக உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று, கடுமையான போட்டித் தன்மையைத் தாண்டி மட்டுமே இத் துறைக்குள் நுழைய முடியும். கோட்டா அடிப்படையில் வாய்ப்பு கிடைத்தல் அதன் பின் கற்றறிந்த்ய் வெஇயேறுதல் என்பது முழுமையான உழைப்பும் திறமையும் தான்.



நற்குணம் அபிராமி அவர்கள் முதலில் உயர்தரத்தில் சிறப்பாகப் பயின்று மருத்துவப் பீடத்திற்குள் நுழைந்தார். ஆனால், அதுவே இறுதி சாதனை அல்ல. மருத்துவப் படிப்புக்குள் நுழைந்த பின்பும் கடுமையான பாடத் தொகுதிகள், தொடர்ச்சியான மதிப்பீடுகள், தீவிரமான போட்டி இவை அனைத்தையும் வென்று முன்னேறியிருக்கிறார். அத்தனை துறைகளிலும் ஒன்று தவறாமல் பதக்கங்கள் பெற்றிருக்கிறார்.

சமீப காலங்களில் நாம் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றி பெறுகின்ற எம் இளம் திறமையாளர்களை ஆரவாரம் செய்து கௌரவிக்கிறோம். ஆகவே, கல்வியில், மருத்துவப் பீட வரலாற்றில் புதிய சாதனை படைத்த மாணவிக்காக தனி பாராட்டு விழா நடத்தப்பட வேண்டாமா? மருத்துவப் பீடம் சார்பில்? பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில்? அவருடைய சொந்த ஊர் மக்களால்? யாழ்ப்பாண சமூக அமைப்புகளால்? மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் வழங்கப்படும் பிராந்திய விருதுகளிலும் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும் உயரிய கௌரவ விருதுகளான "யாழ் விருதி" இவரது பெயர் இடம்பெற வேண்டியது காலத்தின் கோரிக்கை.

ஒரு தலைமுறைக்கே எடுத்துக்காட்டாக நிற்கும் சாதனையை அபிராமி அவர்கள் பதிவு செய்துள்ளார். இத்தகைய சாதனைகளை நாமே பாராட்டி இளம் தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டாக பகிரப்பட வேண்டும்.

இந்த சாதனையை நிகழ்த்திய மாணவியைப் போலவே, எந்த பாகுபாடும் இன்றி திறமைக்கு உரிய அங்கீகாரம் வழங்கிய மருத்துவப் பீடத்திற்கும், ஒவ்வொரு துறையிலும் மதிப்பீடு செய்து பதக்கம் வழங்கிய துறைகளுக்கும், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு மனமார்ந்த பாராட்டுகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

இது ஒரு மாணவியின் வெற்றியே அல்ல. இது கல்வியின் வெற்றி. இது ஒழுக்கத்தின் வெற்றி. இது இளம் தலைமுறையின் திறமைக்கான சான்று. மருத்துவம், தொழில்நுட்பம், இயந்திரவியல், ஆராய்ச்சி, விமான பொறியியல் போன்ற பல்வேறு துறைகளிலும் கண்டுபிடிப்புகள் செய்து என் இளம் தலைமுறையினர் உலகிற்கு உதாரணமாக நிற்க வேண்டும்.

இந்த மாணவியின் சாதனைகள் சாதாரண சாதனைகள் அல்ல, பலருக்கும் மருத்துவம் கனவு மட்டுமே. இந்நிலையில் நற்குணம் அபிராமி, பல துறைகளிலும் சாதனை படைத்து, ஒரு முன்மாதிரியாக வெளிப்பட்டு இருக்கிறார்.

இவ்வாறு நம் சமூதாயத்தில் நல்ல தரமான மாணவர்களை உருவாக்கி, அவர்களை முன்னெடுக்க நாங்கள் முயற்சி செய்ய வேண்டும். அவர்களை பாராட்டும் விதத்தில் நாம் அவர்களின் சாதனைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர்களிடம் உள்ள அனைத்து திறமைகளையும் வெளிக் கொணரல் வேண்டும். இசை, நடனம், பாடல், விளையாட்டு போன்ற பல துறைகளிலும் இளம் தலைமுறையினரை வழிக்காட்டப்பட வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் இதற்கு ஒரு உந்து சக்தியாக செயற்படல் வேண்டும்.

பாடசாலைகளில், கல்லூரிகளில், நல்வழிகாட்டும் சொற்பொழிவுகள் (motivational speech) தினமும் மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். குறைந்தது ஒவ்வொரு தவணைகளும் ஆரம்பிக்கும் போது Motivation speechகள் செய்யப்பட வேண்டும்.

இந்திய கல்லூரிகளில் பள்ளிகளில் இவை சிறப்பாக நடைபெறுகின்றன. இப்படி சாதனை புரிந்த மாணவர்கள் மற்றும் வேறு துறையில் சாதித்தோர் அழைக்கப்பட்டு ஊக்கப்படுத்தும் நெறிப்படுத்தும் பேச்சுக்கள் இடம்பெற வேண்டும். அப்போது தான் மாணவர்கள் நேர்வழியில் செல்ல ஊக்கப்படுத்துவதோடு சாத்திக்கும் வெறியையும் தூண்டிவிடும்.

இன்று சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்படுவது தேவையற்ற, பயனற்ற, சமூகத்தின் பிரள்வான நிகழ்வுகளையே அதிகம் பகிருகிறோம். போதைப்பொருள் கடத்தல், வன்முறை, தற்கொலை, வாள் வெட்டு, கொலை, கொள்ளை, குற்றச் செயல்கள் போன்ற விடயங்களை அதிகம் பகிர்வதற்குப் பதிலாக, நல்ல உதாரணமான சாதனைகளை அதிகம் பகிரல் வேண்டும்.

அதுவே சமூக ஊடகங்களில் சீரழிந்து செல்லும் இளம் தலைமுறைக்கு புதிய திசை காட்டும். இவ்வாறான சாதனைகளை சமூக ஊடகங்களில் முன்மாதிரியாக்கி, மருத்துவப் பீடத்தில் மட்டுமல்ல பிற துறைகளிலும் இதே மாதிரி முன்மாதிரி மாணவர்களை வெளிப்படுத்த வேண்டும்.

இதன் மூலம், பிள்ளைகள் தவறான பாதைக்கு செல்லாமல் நல்ல வழியில் சென்று பெரும் சாதனை பெற முடியும். யாழ்ப்பாணம் மற்றும் ஈழத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

நற்குணம் அபிராமி போன்ற திறமைமிக்க மருத்துவர்கள் இன்னும் மருத்துவத்தில் சாதனை படைத்து மண்ணுக்கும் பெருமை சேர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த மகத்தான வெற்றியைப் பாராட்டுவதோடு, அவரது எதிர்கால மருத்துவ சேவை மேலும் சிறந்து விளங்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எம் ஈழத்து இளம் தலைமுறை பல துறைகளினூடாக சாதித்து வருவது கண்கூடு. அவர்களை முன்மாதிரியாக ரோல் மொடலாக வெளிக்காட்டுவதன் மூலம் மற்றைய இளையோரையும் சாதனை புரியவ்தூண்டலாம் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

கு.மதுசுதன்
B.Sc(Hons), M.Sc
அரசியல் ஆய்வாளர்




## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




## மறைந்தும் மறையா பங்காரு அம்மாவின் 86வது அவதாரத்திருநாள்



மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் மறைந்தும் மறையா பங்காரு அம்மாவின் அவதாரத்திருநாள் மார்ச் 3ம் திகதி செவ்வாய்கிழமை மாலை பூசையுடன் நடைபெற்று, 8-03-2026 ஞாயறிற்றுக்கிழமை காலை தொடக்கம் மதியம் 1 மணிவரை தொடர்ந்து சிறப்புப் பூசைகள் நடைபெற்று, மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

அனைத்து சக்திகளும் அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

80E நாஸ்டீன் வீதி, ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: 647-436-9647

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சான்றாண்மைமிக்க மாமனிதரை இழந்துவிட்டோம்!

## இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூத்த தலைவரான இரா. நல்லகண்ணு அவர்களின் மறைவு குறித்து பழ. நெடுமாறனின் இரங்கல் அறிக்கை!



இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூத்த தலைவரான இரா. நல்லகண்ணு அவர்கள் தனது 101ஆவது வயதில் காலமான செய்தி அனைவரையும் அளவற்றத் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

பள்ளிப் பருவத்திலேயே படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டவர் அவர். விடுதலைப் பெற்ற இந்தியாவில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்காக அரும்பாடுபட்டார். கம்யூனிஸ்டுக் கட்சி தடைசெய்யப்பட்ட போது, தலைமறைவாக இருந்த அவரை காவலர்கள் கைது செய்து சித்திரவதைகள் செய்தனர். அவர்மீது நெல்லை சதி வழக்குத் தொடுக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்றது. 7ஆண்டு காலம் சிறைவாசத்திற்குப் பின்னர் விடுதலையானார். தமிழக கம்யூனிஸ்டுகளில் அதிக காலம் சிறையிலிருந்தவர் அவரே.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக 13 ஆண்டுகள் தொடர்ந்து தொண்டாற்றிய பெருமை அவருக்கு மட்டுமே உண்டு. சாதி, சமய வேறுபாடுகளுக்கப்பால் அனைவரையும் இணைக்கும் சமுதாய ஒற்றுமை தூதராகத் திகழ்ந்தார். அவரது 80ஆவது பிறந்த நாளில் கட்சி அவருக்கு அளித்த 1கோடி ரூபாய்களையும் கட்சிக்கே திரும்பக் கொடுத்தார்.

ஈழத் தமிழர் பிரச்சனைக்கு ஆதரவாக அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஐதராபாத் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றச் செய்தவர் அவரே. பொதுவாழ்வில் தியாகம், தொண்டு, நேர்மை, எளிமை என்பவைகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த பெருமை அவருக்கு உண்டு. சான்றாண்மை நிறைந்த ஒரு மாமனிதரை தமிழ்கூறும் நல்லுலகம் இழந்திருக்கிறது. உலகத் தமிழர் பேரமைப்பு அவருக்கு வீரவணக்கம் செலுத்துகிறது.

அன்புள்ள,
(பழ. நெடுமாறன்) தலைவர்

# யாழ்ப்பாணத்தில் மீட்டர் வட்டிக்கு பணத்தை வாங்கியவரின் முச்சக்கர வண்டி கத்தி முனையில் பறிப்பு — அதிரடி காட்டிய தமிழ் பொறுப்பதிகாரி!

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் மீட்டர் வட்டி பிரச்சினையால் முச்சக்கர வண்டி ஒன்று கத்தி முனையில் பறிக்கப்பட்ட சம்பவம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றிரவு இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மீட்டர் வட்டிக்கு பணத்தை வழங்கும் ஒருவர் மற்றைய ஒருவருக்கு மீட்டர் வட்டிக்கு பணத்தை கொடுத்துள்ளார். இந்நிலையில் வாங்கிய பணத்திற்கு மேலாக வட்டி செலுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தொடர்ச்சியாக வட்டி செலுத்தாத காரணத்தால் வட்டிக்கு பணத்தை கொடுத்தவர் கத்தி முனையில் வட்டிக்கு பணத்தை பெற்றவரது 17 இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கர வண்டியை கத்தியை வைத்து மிரட்டி பறித்து சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.நிதர்சன் தலைமையிலான குழுவினர் இன்று அதிகாலை குறித்த சந்தேகநபரை கைது செய்ததுடன் முச்சக்கர வண்டியையும் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் மீட்டர் வட்டி பிரச்சினை தலைவிரித்து ஆடுகின்ற நிலையில் ஏற்கனவே தற்கொலைகள், அச்சுறுத்தல் சம்பவங்கள், வன்முறை சம்பவங்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

இந்த சூழ்நிலையில் புதிதாக பதவியேற்றுள்ள தமிழ் பொறுப்பதிகாரி மீட்டர் வட்டி வன்முறை சம்பவம் குறித்து அதிரடி நடவடிக்கையில் ஈடுபடுவதை மக்கள் பாராட்டி வருகின்றனர்.

# கச்சதீவில் இம்முறை 3 இறங்குதுறைகள் அமைக்கப்பெற்றுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் தகவல்






- ந.லோகதயாளன்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கான பயணத்தின்போது ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் 3 இறங்குதுறைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவதாக மாவட்ட அரச அதிபர் த.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா 27 ஆம் திகதி மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதில் தமிழகத்தில் இருந்து 3,996 யாத்திரிகர்களும் இலங்கையில் இருந்து சுமார் 6,000 யாத்திரிகர்களும் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு கச்சதீவு வருகை வருகை தரும் யாத்திரிகர்கள் வருகையின்போது நெருக்கடி நிலவாதபோதும் திருவிழா நிறைவுற்று வெளியேறும்போது அனைவரும் ஒரே தடவையில் வெளியேற முற்படுவதனால் அதிக நெருக்கடி ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டது.

இதன் காரணமாக கச்சதீவில் வழமையாக அமைக்கப்படும் இரண்டு தற்காலிக இறங்குதுறைகளுடன் இம்முறை மேலதிகமாகவும் ஓர் இறங்குதுறை அமைக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமை மூன்று இறங்குதுறைகள் அமைக்கப்படுவதன் மூலம் கடந்த ஆண்டுகளில் நிலவிய அதிக நெருக்கடி தவிர்க்கப்படும். இதேநேரம் கச்சதீவிற்கு பயணிப்பவர்களிற்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டால் விரைவாக குடாநாட்டிற்கு அழைத்து வருவதற்காக ஓர் விரைவு நோயாளர் காவு படகும் ஒழுங்கமைக்கப்படுகின்றது என்றார்.

# சுன்னாகம் பொலிஸ்நிலைய தமிழ்பேசும் பொறுப்பதிகாரியின் மற்றொரு நடவடிக்கையாக சங்கிலி திருட்டில் ஈடுபட்ட மைலிட்டி இராணுவ முகாமைச் சேர்ந்த சிங்களச் சிப்பாய் கைது!



சுன்னாகம் நகரப் பகுதியில் சங்கிலி திருட்டில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் ஒருவர் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், 24ம் திகதி காலை அன்று காலை சுன்னாகம் நகரப் பகுதியில் வீதியில் நடந்து சென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி இராணுவ சிப்பாய் ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த பெண் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். இந்நிலையில் குறித்த சந்தேகநபரான, மைலிட்டி இராணுவ முகாமில் கடமை புரியும் சிப்பாய் ஒருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

அப்பகுதியில் உள்ள சிரிவி கெமராக்களைச் சோதனையிட்ட பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொலிஸ் குழு உடனடி நடவடிக்கையில் இறங்கியது. சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக சி.நிதர்சன் பதவியேற்ற பின்னர் கைது நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் தொல்புரம் வைத்தியசாலையின் மருத்துவரை இடமாற்ற வேண்டாம் என நோயாளர் நலன்புரி சங்கமும் மக்களும் கூட்டாகக் கோரிக்கை!



தொல்புரம் - பானாவெட்டி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வே.குருபரனின் இடமாற்றத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கமும் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புகளும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

24ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை வைத்தியசாலைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடமும் இவ்விடயம் தொடர்பான கோரிக்கை கடிதம் கையளிக்கப்பட்டது.

பானாவெட்டி வைத்தியசாலையானது தொல்புரம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை, பண்ணாகம், சித்தங்கேணி உள்ளிட்ட பல பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெறும் வைத்தியசாலையாகும். இது பல்வேறு வளப்பற்றாக் குறைகளுடன் இயங்கி வருகின்றது.

இதனை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்துமாறு தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் வைத்தியர் குருபரன் இவ்வைத் தியசாலையை பொறுப்பேற்ற பின்னர் இங்கு பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ் வைத்தியசாலையில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையும் கிடைக்கின்றது. இதனால் தினமும் நூற்றுக்கணக்கானோர் நன்மையடைகின்றனர். இதனால் இந்தப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்காக மருத்துவர் வே.குருபரனை குறைந்தது அடுத்துவரும் ஈண்டுகளாவது இங்கு தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்குமாறு கோரிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கை கடிதம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் தொடரும் நகை அபகரிப்பு — பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி கையில் கருப்பு பட்டி அணிந்து குடும்ப நல உத்தியோகத்தர்கள் போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (21-02-2026)

மன்னார் மாவட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து 21ம் திகதி அன்று சனிக்கிழமை (21-02-2026) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கையில் கருப்பு பட்டி அணிந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன் னெடுத்ததோடு, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு ஊர்வலமாக சென்று மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

மன்னாரில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவர் கடந்த கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை கடமைக்கு சென்ற நேரத்தில் அவர் இடை மறிக்கப்பட்டு அவரிடம் இருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலி அபகரிக்கப்பட்ட தோடு, அவருக்கு அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

கடமை நேரத்தில் குறித்த குடும்ப நல உத்தியோகத்தர் வழிமறிக்கப்பட்டு, உடமைகள் அபகரிக்கப்பட்டு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தும் கையில் கருப்பு பட்டி அணிந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த அச்சுறுத்தல் காரணமாக 21ம் திகதி அன்று சனிக்கிழமை காலை 9.30 மணி அளவில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து மன்னார் பஜார் பகுதி வரை குடும்ப நல உத்தியோகத்தர்கள் பதாகைக-ளை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்றனர்.

பின்னர் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைதியான முறையில் கண்டன போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பின்னர் அங்கிருந்து மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் வரை பேரணியாக சென்றனர். அங்கிருந்த உயர் அதிகாரியிடம் தமது கோரிக்கைகளை முன் வைத்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

தொடர்ச்சியாக நகைப் பறிப்பில் ஈடுபடும் கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும், பெண்கள் தனியாகச் செல்லும் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும், மன்னார் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி மக்கள் அச்சமின்றி வாழ வழிவகை செய்ய வேண்டும். என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மன்னார் நகரின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் தனியாக நடமாடும் இடங்களை கண்காணித்து மோட்டார் சைக்கிளில் வரும் மர்ம நபர்களால் நகைகள் பறிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதுவரை இவ்வாறான 4 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால் பெண்கள் வீதிக்கு இறங்கி நடமாடுவதற்கு அச்சமடைந்துள்ள தோடு, தமக்கான பாதுகாப்பு இல்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர்.



# இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்:

## மீனவ பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்ததால் பரபரப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (21-02-2026)

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 22 மீனவர்களை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் 21ம் திகதி அன்று சனிக்கிழமை (21-02-2026) காலை மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் மீனவ பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன் பிடி துறைமுகங்களில் இருந்து கடந்த புதன்கிழமை மீன்பிடிக்க சென்ற நான்கு படகுக-ளையும் அதிலிருந்த 22 மீனவர்களையும் வியாழக்கிழமை அதிகாலை இலங்கை கடற்படையினர் நெடுந்தீவு மற்றும் மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையை கண்டித்தும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 22 மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தியும், ஏற்கனவே இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 50க்கும் மேற்பட்ட மீனவர்களையும், விடுதலை செய்யப்படாமல் உள்ள 100க்கும் மேற்பட்ட விசைப் படகையும் விடுவிக்க கோரி தங்கச்சிமடம் வலசை பேருந்து நிலையத்தில் மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாநில அரசுகள் இலங்கை அரசிடம் வலியுறுத்தி சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் மற்றும் இலங்கை கடற்படைக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திடீரென பெண் ஒருவர் மயங்கி விழுந்தார். இதையடுத்து பெண்ணுக்கு தண்ணீர் கொடுத்து நிழலில் அமர வைத்தனர் இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மன்னாரில் முன்னெடுக்கப்பெற்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து போராட்டம்!

- எஸ்.ஆர்.லெம்பேட் (25-02-2026)



பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்டம் (PSTA) மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 25ம் தி-கதி புதன்கிழமை அன்றைய தினம் (25-02-2026) மன்னார் மாவட்டத்தில் கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து நிலையத்திற்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது PTA ஐ நீக்கு! PSTA சட்ட வரைவை மீள பெறுக, ஊடக சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும், நீதித்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும், மனித மாண்பு பேணப்பட வேண்டும்,உயிர் வாழ்வதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும், அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணான மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் சட்டங்களுக்கு எதிராக எமது குரலை வலுப்படுத்துவோம், “மக்கள் நலன் கருதி ஒருமைப்பாட்டுடன் செயற்படுவோம்” உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பு திராய்மடு பாலைமீன்மடு பிரதேசத்தில் மாடுகளைத் திருடுபவர்களை பிடித்தால் 25 ஆயிரம் சன்மானம் — கால்நடை பண்ணையாளர்கள் அறிவிப்பு



மட்டக்களப்பு திராய்மடு மற்றும் பாலைமீன்மடு பகுதிகளில் கால்நடை வளர்ப்பா ளர்களின் மாட்டுபட்டிகளில் உள்ள 40 மாடுகளை இதுவரை திருடர்கள் திரு-டிச் சென்று இறைச்சியாக்கியுள்ளனர் எனவே இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுபவர்களை பிடித்து தருபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என பொதுமக்களிடம் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஓப் மீடியா நிறுவகத்தில் 26ம் திகதி வியாழக்கிழமை அன்று (26-02-2026) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கால்நடைவளர்ப்பு பண்ணையாளரும்ஈ வர்த்தகருமம் ஈ.பி.டி.பி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான அந்தனிசில் ராஜ்குமார் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட 15 பேருக்கு மேற்பட்ட கால் நடை வளர்ப்பாளர் மாடு மற்றும் ஆடுகளை ஜீபோனவாய தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதிகளில் நள்ளிரவில் சொகுசு வாகனங்களான கே.டி.எச். ரக வான், மூடிய பட்டா ரக லொறி, கார் போன்ற வாகனங்களின் திருடர்கள் மாடுகள் ஆடுகளை திருடிச் சென்று ஏறாவூர் பகுதிகளுக்கு கொண்டு சென்று அதனை வெட்டி இறைச்சியாக்கி வருகின்றனர்.

இந்த மாடுகள் திருட்டு தொடர்பாக கொக்குவில் பொலிசாரிடம் பல முறைப்பாடு செய்திருந்த போதும் இந்த திருட்டுக் கும்பலை இதுவரை கைது செய்யவில்லை. அதேவேளை கடந்த இரண்டு வருடத்திற்கு முன்னர் 4 மாடுகள் திருட்டுப் போன நிலையில் ஏறாவூர் பகுதியில் மாடு அறுக்கும் மடுவத்ததில் இருந்து ஒரு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய நிலையிலும் 3 மாடுகளை உயிருடன் மீட்டதுடன் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுவருகின்றது.

அதேவேளை கடந்த சுதந்திர தினத்திற்கு முன்தினமான 3ம் திகதி இரவு பட்டியில் இருந்த கன்றுதாச்சியான பசுமாடு உட்பட 4 மாடுகள் திருட்டுப் போயுள்ளது. இவ்வாறு நாளாந்தம் தொடர்ச்சியாக எங்களது மாடுகள் திருட்டுப் போகின்றது.

இவ்வாறு மாடுகள் திருடப்படுவதால் கால்நடைவளர்ப்பு மேற்கொள்ளமுடியாது நிலை ஏற்பட்டுள்ளது எனவே பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம் இந்த மாடுகள் திருட்டில் ஈடுபடுவர்களை கண்டால் அவர்களை பிடித்து தருபவர்களுக்கு சன்மானமாக 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படும் என பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் அறிவித்தனர்.




# பிரபாகரனும் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவும்!...

***"இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தற்போது "விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் 3ஆம் தரப்பிடம் சரணடைய விரும்பினார், அவரை வடக்கு முதலமைச்சராக்க மஹிந்த ராஜபக்ச விரும்பினார்" என்ற கட்டுக்கதையை தனது அரசியல் எதிரிகளான ராஜபக்சக்களுக்கு எதிராக அவிழ்த்து விட அதுவே ஒட்டுமொத்த தென்னிலங்கை அரசியல்வாதிகளையும் "பிரபாகரன் இறுதிவரை போரிட்ட ஒரு வீரன், சரணடையுமளவுக்கு அவர் கோழையல்ல" எனக் கூற வைத்துள்ளது"***

------------------------------------------------------------------------ **கே.பாலா -**

விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் இல்லாமல் இலங்கையில் எந்தவொரு சிங்களக் கட்சியோ சிங்கள அரசியல் தலைவரோ அரசியல் செய்ய முடியாது, அரியணை ஏற முடியாது என்பது எழுதப்படாத விதி. அந்தளவுக்கு விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாகவும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை பிரிவினைப் போராட்டமாகவும் சித்திரித்து இனவாதம், மதவாதம் மூலம் சிங்கள மக்களை உசுப்பிவிட்டு அரசியல் ஆதாயம் தேடும் ஒரு இழி அரசியலைத்தான் இந்த சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள அரசியல் தலைவர்களும் அன்று முதல் இன்றுவரை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த இழி அரசியலின் ஒரு கட்டமாகவே தற்போது அரசியல் முகவரியற்று, இராணுவ மரியாதையுமற்று விரக்தி நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கான இறுதிப்போரை வழிநடத்திய இலங்கை இராணுவத்தின் முன்னாள் இராணுவத்தளபதியும் தமிழ் மக்களை கொன்றொழித்ததற்கு நன்றிக்கடனாக 2010 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட எம்.பி.பதவியும் 2016 ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன அரசில் அமைச்சர் பதவியும் வழங்கி அழகு பார்க்கப்பட்டவரும் பின்னர் 2020-08-05 - 2024-09-24 வரை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யாக இருந்தவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் ஒரு கட்டுக்கதையை அவிழ்த்து விட்டு இலங்கை அரசியலில்தானும் இருக்கின்றேன் என்ற படத்தை கட்ட முற்பட்டுள்ளார்.

இறுதி யுத்தம் முடிந்து 17 வருடங்களுக்குப் பின்னர் அண்மையில் ஒரு ஊடக சந்திப்பை நடத்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு வீடியோவை வெளியிட்டு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு முதலமைச்சர் பதவி வழங்க ராஜபக்சக்கள் திட்டமிட்டதாகவும் பிரபாகரன் 3 ஆம் தரப்பு ஒன்றிடம் சரணடையத் தயாராகவிருந்ததாகவும் கிளப்பி விட்டுள்ள புரளி தான் இன்று இலங்கை அரசியலில் சூடான விடயமாக பரபரப்பாகப் பேசப்படுவதுடன் அது தொடர்பிலான விமர்சனங்களும் வாதப் பிரதிவாதங்களும் மேலெழுந்துள்ளன.

கடந்த 18 ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய பீல்ட் மார்'ல் சரத் பொன்சேகா ஒரு வீடியோவை வெளியிட்டு கூறிய தகவல் இதுதான்.

"2009 மே 17ஆம் திகதி காலை, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைய மறுப்புத் தெரிவித்ததுடன், ஒரு மூன்றாவது தரப்பிடம் மாத்திரமே சரணடைய விரும்புவதாகக் கூறினர். ஆனால், ராஜபக்சக்கள் அதனை ஏற்காது இராணுவத்திடமே சரணடையுமாறு வலியுறுத்தினர்.

இந்தச் சரணடைவுத் திட்டம் வெற்றியடைந்திருந்தால், பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் இன்று உயிருடன் இருந்திருப்பார்கள், பிரபாகரன் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்திருப்பார். பிரபாகரன் தங்களிடம் சரணடைந்திருந்தால் அவரை வடக்கு மாகாண முதலமைச்சராக்கும் திட்டம் ராஜபக்சக்களிடம் இருந்தது அந்த நேரத்தில் நான் சீனாவிற்குச் சென்றிருந்ததால் இந்தத் திட்டங்கள் குறித்து எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இராணுவம் புலிகளை முற்றாக ஒழிப்பதற்கே திட்டமிட்டிருந்தது, அவர்களைக் காப்பாற்றும் எண்ணம் இராணுவத்திற்கு இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் இராணுவத்திடம் சரணடைய மறுத்தமையினாலேயே, மே 19ஆம் திகதி அவர்களை முற்றாக ஒழிக்க இராணுவத்தால் முடிந்தது" என்பதுதான் அந்தத்தகவல்.

இதனைக்கூறிய சரத் பொன்சேகா அப்போதைய பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவுக்கும் இராணுவத்தளபதிகளில் ஒருவராக இருந்த சவேந்திர சில்வாவிற்கும் இடையில் 2009 மே 17ஆம் திகதி இரவு இடம்பெற்றதாகக் கூறப்படும் தொலைபேசி உரையாடல் ஒன்றின் காணொளியையும் இதன்போது அவர் ஆதாரமாக வெளியிட்டார். இந்தக் காணொளியை பதிவு செய்த ஊடகவியலாளர் உயிருக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், அண்மையிலேயே இக்காணொளி தனக்குக் கிடைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா எப்போதும் விடுதலைப் புலிகளின் தலைவரின் வீரத்தையும் அவரது உறுதியையும் நற்பண்புகளையும், அவர் விடுதலைப் புலிகள் அமைப்பை வழிநடத்திய முறையையும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினதும் போராளிகளினதும் ஒழுக்கத்தையும் பாராட்டியே கருத்துக்களை தெரிவித்து வந்தவர். அதுதொடர்பிலான சில உதாரணங்களைப் பார்ப்போம்.

சுமார் 4 மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா "விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது எனக்குத் தனி மரியாதை உண்டு. பிரபாகரன் எமது எதிரியாக இருந்தாலும், தப்பியோடாமல் இறுதி வரை சமரிட்டார். அதற்குரிய கௌரவத்தை அவருக்கு நான் வழங்கி வருகின்றேன். போர்க் களத்தில் இருந்து தப்பியோடாமல், இறுதி வேட்டு வரை பிரபாகரன் போரிட்டார். எனவே, இந்த விடயத்துக்காக முன்னாள் இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் பிரபாகரன் மீது எனக்கு எப்போதும் தனியான மரியாதை உள்ளது" என்றார்.

பிரபாகரன் மரணித்தது எவ்வாறு என்பது தொடர்பாக , வன்னி இனப்படுகொலையின் பின்னான காலப்பகுதியில் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்த நிலையில் விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியும் பின்னர் ராஜபக்சக்களின் கைக்கூலியாகி தமிழினத் துரோகியானவருமான கருணா, "பிரபாகரன் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம்" எனக் கூறியிருந்தார். ஆனால் பிரபாகரன் தற்கொலை செய்துகொள்ளவில்லை. தற்கொலை செய்யுமளவுக்கு பிரபாகரன் கோழையல்ல. போரில் இராணுவத்தின் மோட்டார் அல்லது பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கலாம் என எக்ஸ்பிரஸ் நியூஸ் சேர்விஸ் என்ற இந்திய ஊடக முகவர் நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலில் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

2022 ஆம் ஆண்டு சரத்பொன்சேகா சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யாக இருந்தபோது பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் செயலாளரான அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தார் என்று தெரிவித்தார். ஆனால் இதனை மறுத்த சரத்பொன்சேகா "இறுதிப் போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சரணடையவில்லை, அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை, இறுதிப் போர்க் களத்தில் அவர் இறுதி வரை போராடியே உயிரிழந்தார். பிரபாகரனின் மரணத்தை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர். பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின. அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே மரணமடைந்தார்" எனக்கூறினார்.

இவ்வாறெல்லாம் கூறிய சரத் பொன்சேகாதான் தற்போது அரசியலில் ஓரங்கட்டப்பட்டுள்ள நிலையில், சிங்கள மக்களினால் மறக்கப்பட்டுவரும் நிலையில் மீண்டும் அரசியல் புத்தொளி பெற பிரபாகரனையும் ராஜபக்சக்களையும் கையில் எடுத்து புதுக்கதைகளை கூறத்தொடங்கியுள்ளார். அந்தக் கதைகளில் தனது பரம வைரிகளான ராஜபக்சக்களை சிக்கலில் மாட்டிவிடவே அவர் தற்போது பிரபாகரன் 3 ஆம் தரப்பிடம் சரணடைய விரும்பினார். ராஜபக்சக்களிடம் சரணடைந்திருந்தால் அவர் இப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்திருப்பார் என்றெல்லாம் கூறத்தொடங்கியுள்ளார்.

ராஜபக்சக்களை மீண்டும் சிக்கலில் மாட்டி விடவே இறுதிப்போரின்போது பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, புலிகள் வெள்ளைக் கொடி ஏந்தி வந்தபோது சுடுமாறு உத்தரவிட்டதாக முன்னர் கூறிய சரத்பொன்சேகா தற்போது புலிகளை சரணடைய வைக்க ராஜபக்சக்கள் விரும்பியபோதும் இராணுவம் புலிகளை அழித்ததாக கூறுகின்றார். அத்துடன் யுத்த காலத்தில் கூட மஹிந்த ராஜபக்சவுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் காணப்படவில்லை. அவ்வாறிருகையில் தற்போது அவரது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதில் எவ்வித சிக்கலும் இல்லை என்கின்றார்.

மஹிந்த ராஜபக்சக்கள் மீது ஒருபோதும் புலிகள் தாக்குதல்கள் நடத்த விரும்பியிருக்கவில்லை. 2005ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட போது பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாக மஹிந்த கூறினார். அத்தோடு யுத்தத்தை நான் அனுமதிக்க மாட்டேன். யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதே மஹிந்த சிந்தனையில் காணப்பட்டது. எனவே விடுதலைப் புலிகளுக்கு மஹிந்த மீது எந்த கோபமும் இல்லை. 2005இல் விடுதலைப் புலிகளுக்கு தற்கொலை குண்டு தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அவர் பணமும் வழங்கியிருக்கின்றார். மஹிந்தவுக்கு விடுதலைப் புலிகளுடன் ஆழமான தொடர்பு காணப்பட்டது. நாம் வேண்டாமென தடுத்த போதிலும் 2009 ஜனவரி 31ஆம் திகதி மஹிந்த போர் நிறுத்தத்தை அறிவித்தார். இதன் போது இராணுவத்தின் மீது கடுமையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பிரபாகரன் உள்ளிட்டவர்கள் தப்பிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே அவர் போர் நிறுத்தத்தை அறிவித்தார். என்று கூறியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் இந்தக்கருத்து தென்னிலங்கையில் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் தான் "பிரபாகரன் ஒருபோதும் சரணடைய விரும்பியிருக்கவில்லை" "பிரபாகரன் கோழையல்ல வீரன்" என சிங்கள இனவாதிகளே கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்த நிலையிலும் சரணடைவதை விரும்பியதில்லை அதை மறுத்தவர். சரத் பொன்சேகாவின் பேச்சு முன்னுக்குப் பின் முரணானது என முன்னாள்பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் விசேட அதிரடிப்படையின் முன்னாள் தளபதியும் பக்கா இனவாத-பியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூடக் கூறியுள்ளார்.



(தொடர்ச்சி 17 பக்கம்)

# கனடாவின் அல்பர்ட்டா மாகாண பிரிவு தொடர்பான தீவிரம்!

## கனேடியர்களிடையே நடந்த கருத்துக்கணிப்பொன்று எதைக் காட்டுகின்றது?

கனடாவில் இரண்டு மாகாணங்கள், கனடாவை விட்டு பிரிந்து போவதற்காக ஒரு பொது வாக்கெடுப்பு (Referendum) அல்லது சுயாதீன பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டிய முயற்சிகளை முன்னய காலங்களில் மேற்கொண்டுள்ளன. அதில் முதலாவதாக, பல ஆண்டுகளுக்கு முன்னர் கியூபெக் மாகாணம் (Quebec Province) முயற்சித்தது. அப்பொழுது மக்கள் "வேண்டாம்" என்று கருத்து தெரிவித்ததால் அதுவும் சொற்ப வேறுபாட்டில் அது தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.




அதன்பிறகு, 2025 ஆம் ஆண்டு கனடாவில் மிகப்பெரிய பொருளா-தார சக்தி வாய்ந்த, கனடாவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் முக்கிய மாகாணமாக விளங்கும் அல்பர்ட்டாவின் பிரீமியர் டேனியல் சிமித் (Danielle Smith), மே மாதம் 2025ல் ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டார்.

அல்பர்ட்டா (Alberta) கனடாவிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும், கனடாவில் அல்பேட்டா இருபதால் போதுமான பயன் கிடைப்பதில்லை என அவர் கருத்து தெரிவித்துள்ளார். அல்பர்ட்டாவின் வளங்கள், குறிப்பாக பெற்றோலியம் மற்றும் கனிம வளங்கள் தொடர்பான உற்பத்திகள், அந்த மாகாணத்தின் கட்டுப்பாட்டில் தான் கையாளப்படுகின்றன. இதனால், கனடாவின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான தாக்கத்தை செலுத்தும் மாகாணமாக அல்பர்ட்டா திகழ்கிறது.

டேனியல் சிமித் இதன் குறைபாட்டை எடுத்துக்காட்டி கூறியதாவது அல்பர்ட்டாவின் பெரும் வருவாய் நிதி மத்திய அரசிற்கு செலுத்தப்படுகிறது. ஆனால் மத்திய அரசிலிருந்து கிடைக்கும் நிதி மிகவும் குறைவாக உள்ளது. இதனால் இந்த நிலைமை நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அல்பர்ட்டாவின் உற்பத்தி நிலைத்தன்மை, வருமானம் என்பன கனடாவின் மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) முக்கிய பங்கினை வகிக்கின்றது.

பெற்றோலியம் மற்றும் கனிம வளங்கள் அடிப்படையாக கொண்டு தனிநாடாக உருவானால் மிகப்பெரிய வளர்ச்சியை அடைய முடியும் என அல்பேட்டா கருதுகிறது. இதனால், அல்பர்ட்டா ஏன் கனடா உடன் இணைந்திருக்க வேண்டும் என்ற கேள்வியும் அடிக்கடி எழுப்பப்படுகிறது.

நாங்கள் இதிலிருந்து பிரிந்து போகின்ற பிரேரணையை, பொது வாக்கெடுப்பு மூலம் கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். 2026ல் அதற்கு போதுமான கையெழுத்து பிரதிகள் சேகரிக்கப்பட்டு, உத்தியோகபூர்வமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு, பின்னர் நாங்கள் பொது வாக்கெடுப்புக்கு செல்லப் போகிறோம் என்று டேனியல் சிமித் 2025லேயே தடால் புடாலாக அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு கனடா அரடியலில் பெரும் பேசு பொருளாக இருந்தது. கனடாவிலிருந்து ஒரு நாடு பிரிந்து போகுமா? என்பதான சந்தேகம் பல நாடுகளுக்கும், பல மாநிலங்களின் ஒன்றியங்களாக அமைந்த நாடுகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெரிய ஒரு நாட்டின் மாநிலம் தனிநாடாக பிரிந்து போனால், மற்ற ஒன்றிய அரசுகளின் ஒற்றுமை கொண்ட மாநிலங்களும் பிரிந்து செல்லும் அபாயம் ஏற்படும் என்று உலக பந்தின் பலநாடுகளுக்கும் பயபீதியும் ஏற்பட்டது.

டேனியல் சிமித் அம்மையார் அவர்களின் அறிவிப்பின் பின்னர், 2026ல் பொது வாக்கெடுப்பு நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டதால், அதற்கு தேவையான கையெழுத்து பிரதிகள் சேகரிக்கப்பட வேண்டும். ஆகவே பல அல்பர்ட்டன்ஸ் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். தங்கள் ஆர்வலர்களாக சென்று கையெழுத்து சேகரித்த அல்பர்ட்டன்ஸ் அதிகமானவர்களை கொண்டு கையெழுத்து சேகரிக்கும் கூடாரங்களை அமைத்து, கையெழுத்து வேட்டைகளையும் நடத்தியிருந்தார்கள். குறிப்பாக, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நபர்களின் கையெழுத்து பிரதிகள் தேவைப்படும். பொது வாக்கெடுப்பு அங்கு சமர்ப்பித்து விவாதிக்கப்பட வேண்டியது காரணமாக, அவர்களும் துரிதமாக செயல்பட்டு கையெழுத்து வேட்டைகள் நடத்தினர். மறுபுறமோ பூர்வீக பழம்குடி வம்சாவழியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால், 2026 தொடங்கிய இந் நிகழ்வு பெரும் பேசு பொருளாக திகழ்கிறது.

இந்த கொந்தள நிலையில், கனடாவில் ஓர் அமைப்பினால் 2026 பெப்ரவரி கனேடியர்களிடையே ஒரு கருத்தெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில், பிரிந்து போவதற்கு கனடா மக்கள் விருப்பம் தெரிவிக்கிறார்களா என்ற முடிவுகள் 25.02.2026 வெளியாகியுள்ளன.

Angus Reid Institute (ARI) எனப்படும் கனேடிய தன்னார்வலர் அமைப்பு (ARI- Canadian Volunteer Organization), தெரிந்தெடுக்கப்பட்ட கனேடியர்களுக்குள் பொது வாக்கெடுப்பை நடத்தியுள்ளது. இது ஆன்லைன் மூலமாக நடைபெற்று, அல்பர்ட்டா பிரிந்து போவதையும், கியூபெக் மாகாணம் கனடாவை விட்டு பிரிந்து போவதையும் கனடா மக்கள் விரும்புகிறார்களா இல்லையா என்று கேள்வி எழுப்பியுள்ளது.

பிப்ரவரி 2-6 வரை 2026, 3000ற்கும் மேற்பட்ட கனேடியன் குடிமக்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டுள்ளனர். இதில் மொத்தமாக 80% வாக்குகள் கனடாவை விட்டு அந்த மாகாணங்கள் பிரிந்து போகக்கூடாது அவர்கள் எங்களோடு ஒன்றித்து பயணிக்க வேண்டும் என்ற முடிவை வெளிப்படுத்தியுள்ளன.

23.02.2026 அன்று, Angus Reid Institute (ARI) அமைப்பு வாக்கெடுப்பின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அந்த அமைப்பின் கணக்கெடுப்பின் படி, 71% வாக்களித்தவர்கள் கியூபெக் பிரியக்க கூடாது என்றும், 79% வாக்களித்தவர்கள் அல்பர்ட்டா பிரிந்து போகக்கூடாது என்றும் வாக்களித்திருக்கிறார்கள், இதற்கான கட்டாய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

அல்பர்ட்டா விரும்பியோ விரும்பாமலோ, மக்களுக்குள் கருத்து விதைக்கப்பட்டுள்ளது. அதற்கு முதல்வர் பிரீமியர் அவர்களும் கருத்துக்களை தெரிவித்திருந்தார். இதன் போது, பிரிந்து போக வேண்டும் என்று பல அல்பர்ட்டன்ஸ் ஆக்ரோசமாக நிற்கின்றனர். 2025ஆம் ஆண்டு நடுப்பகுதிகளில் பல போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.



இந்த நிகழ்வின் காரணமாக, Angus Reid Institute (ARI) அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் மொத்தமாக 80% பங்கு பெற்றவர்கள் பிரிந்து போக கூடாது என்று வாக்களித்துள்ளனர்.

மார்க் கார்னி அவர்கள் அல்பர்ட்டா உடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் முதலீடுகள் பற்றிய விவரங்களையும் கவனத்தில் கொண்டு, பிரேரணை பொருளாதார நிலை மற்றும் அரசியல் சூழ்நிலை ஆகியவை மதிப்பீடு செய்யப்படுகின்றன.

டேனியல் சிமித் அம்மையார் தெரிவித்திருப்பதாவது அல்பர்ட்டா பொருளாதாரத்தில் உச்சத்தை அடைந்துள்ளது, கனடாவின் வருவாயில் பெரும்பகுதி அல்பர்ட்டாவினுடையது. இதன் காரணமாக, அதிக முதலீடுகள் மற்றும் எரிபொருள் பைப்லைன்கள் (Fuel Pipelines) நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. எதிர்கால முதலூடுகள் ஊக்கிவிக்கப்பட்டிருக்குன்றன. இந்த பின்னணியில் தான் ஆகவே அல்பர்ட்டா பிரிந்து போகும் கருத்து மீண்டும் பேசப்படும் முக்கிய செய்தியாக மாறியுள்ளது. கனடாவில் பொது வாக்கெடுப்பு நிறைவேறுமா, பிரியுமா அல்லது பிரியாதா என்பது கனடாவின் இன்றைய பரபரப்பான பொருளாதார நிலை மற்றும் அரசியல் சூழ்நிலைக்குள் எப்படி கையாளப்படப்போகின்றதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**கு.மதுசுதன் -- B.Sc(Hons), M.Sc**
**அரசியல் ஆய்வாளர்**

(16 பக்கம் தொடர்ச்சி)

## பிரபாகரனும் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவும்!...

---

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இந்த அறிக்கையால் தனது அரசியல் பிரதிபிம்பத்துக்கே களங்கத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில், கோத்தபாய ராஜபக்ச, புலிகள் வெள்ளைக் கொடி ஏந்தி வந்தபோது சுடுமாறு உத்தரவிட்டதாக கூறுகிறார். ஆனால் இப்போது, கோத்தபாய புலிகளை சரணடையச் சொல்லியபோது தான் அவர்களை அழித்ததாக தெரிவிக்கிறார். மேலும், விடுதலைப் புலிகளை மகிந்த ராஜபக்ச சரணடையுமாறு கூறியபோது தான் அவர்களை அழித்ததாக கூறுகிறார். பொன்சேகா காட்டிய வீடியோவில் "வேந்திர சில்வாவுக்கு வந்த தொலைபேசி அழைப்பு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடமிருந்து அல்ல. அது வேறு ஒரு தரப்பின் பரிந்துரையாக இருக்கக்கூடும். வெளிநாட்டு தொடர்புகளை கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்திய முப்பது ஆண்டு யுத்தத்தின் இறுதியில் "சரணடைதல்" என்பது ஒரு படைத் தளபதியின் மட்டத்தில் தீர்மானிக்கப்படக் கூடிய எளிய செயல் அல்ல அது அரசியல் மற்றும் சர்வதேச இடைதரகர்களின் உயர்மட்டத் தீர்மானமாகும்" என்றும் சரத் வீரசேகர கூறுகின்றார்.

சரத் பொன்சேகாவின் இந்தக் கருத்துக்கள் தொடர்பில் விமர்சனம் வெளியிட்டுள்ள அரசியல் ஆய்வாளர் அஜித் பரக்கும், "சரத் பொன்சேகா கூறுவதைப் போன்று, பிரபாகரனை முதலமைச்சராக்க முடியாது. ஏனெனில் அவர் சரணடைந்து கைது செய்யப்பட்டிருந்தால், அவருக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட தண்டனைகளை அனுபவிப்பதற்காக அவர் உடனடியாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். சரத் பொன்சேகா இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் பின்னணியில் உள்ள மனோநிலையை அவதானித்தால், அவரிடம் இன்றும் போர்க்குற்றங்களை இழைப்பதற்கான ஒரு தார்மீகத் தூண்டுதல் அல்லது போக்கு காணப்படுவதாகவே தெரிகிறது" என்கின்றார்.

இதேவேளை முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் தற்போதைய கருத்துக்கள் அரசியல் ரீதியான விரக்தியின் வெளிப்பாடே என்று ராஜபக்சக்களின் கட்சியான பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. "சரத் பொன்சேகா மக்களுக்காக அரசியல் செய்பவர் அல்லர் அவர் தனிப்பட்ட பகைமையைத் தீர்க்கும் அரசியலையே முன்னெடுத்து வருகின்றார். யுத்தம் நிறைவடையும் போது இராணுவத் தளபதியாக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே சரத் பொன்சேகாவை நாம் மதிக்கின்றோம். அதனைத் தாண்டி அரசியல் ரீதியாக அவர் ஒரு பெறுமதியற்ற நபர். அவர் மக்களின் நலனுக்காக அரசியல் செய்யாமல், தனது தனிப்பட்ட கோபங்களையும் பகைமைகளையும் தீர்த்துக் கொள்வதற்காகவே அரசியலைப் பயன்படுத்துகின்றார். சரத் பொன்சேகாவின் தற்போதைய கருத்துக்கள் அரசியல் ரீதியான விரக்தியின் வெளிப்பாடே" என்றும் பொதுஜன பெரமுன தெரிவிக்கின்றது.

சரத் பொன்சேகாவின் இந்த கருத்து தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் மகனும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான நாமல் ராஜபக்ச கூறுகையில், "இறுதிக் கட்ட போரின் போது வெள்ளைக்கொடி ஏந்தி வந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராபஜக்ச உத்தரவிட்டதாக கூறும் பொன்சேகா, பிறிதொரு சந்தர்ப்பத்தில் மஹிந்த, விடுதலைப் புலிகள் தப்பிக்க உதவியதாக கூறுவது வேடிக்கையானது. போர் சூழலில் இராணுவத்திடம் சரணடையுமாறு அழைப்பது அபூர்வமான ஒன்றல்ல. அதேவேளை போரின் போது வழங்கப்பட்ட உத்தரவுகள் குறித்து சரத் பொன்சேகா பல்வேறு காலங்களில் முரண்பட்ட கருத்துகளையே வெளியிட்டுள்ளார். பயங்கரவாதத்தை தோற்கடிக்க ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். குறைந்தளவு உயிரிழப்பு சொத்திழப்புடன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதே மகிந்த ராஜபக்சவின் நோக்கமாக இருந்தது. சில அரசியல் குழுக்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் புலம்பெயர் ஆதரவாளர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு மாறாக, மகிந்த ராஜபக்ச "இரத்தத்திற்காக ஏங்கிய கொலைகாரர்" அல்ல என்பது குறித்து சரத் பொன்சேகா விளக்கம் அளித்ததற்காக அவருக்கு நன்றி" என்கின்றார்.

ராஜபக்சக்களை சிக்கலில் மாட்டிவிட சரத் பொன்சேகா. பிரபாகரன் சரணடைய விரும்பியதாகவும் அவரை வடக்கு முதலமைச்சராக்க மஹிந்த ராஜபக்ச விரும்பியதாகவும் கூறிய நிலையில் அதுவே "பிரபாகரன் சரணடையுமளவுக்கு கோழையல்ல. அவர் இறுதிவரை போரிட்ட வீரன். இறுதிப் போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சரணடையவில்லை, அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை, இறுதிப் போர்க் களத்தில் அவர் இறுதி வரை போராடியே உயிரிழந்தார்" என சிங்கள அரசியல் தலைவர்களும் படைத்தளபதிகளும் சிங்கள இனவாதிகளும் பிரபாகரனுக்கு புகழாரம் சூட்டும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வற் வரியை உள்ளூராட்சி சபைகளிற்கே விடுவிக்குமாறு யாழ். மாநகர விடுத்த கோரிக்கை வட மாகாண ஆளுநரால் நிராகரிக்கப்பட்டுள்ளது?

- ந.லோகதயாளன்

மத்திய அரசின் நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்யும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சின் அடிப்படையில் உள்ளூராட்சி சபை வருமானத்தில் இருந்தே ஊழியர்களின் சம்பளத்தை வழங்க 3 ஆண்டுகளாக நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இதனால் உள்ளூராட்சி சபைகள் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றன. இதனால் யாழ்ப்பாணம் மாநகர சபை 860 ஊழியர்களின் சம்பளத்தை வழங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

இதனை கருத்தில்கொண்டு உள்ளூராட்சி சபை மூலம் மத்திய அரசிற்கு கிடைக்கும் வற் வரியை சபைகளிற்கே விடுவிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர சபை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி அதற்கு உரிய தீர்வை பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்தில் விண்ணப்பித்திருந்தனர்.




இத்த கோரிக்கையை பரிசீலித்த ஆளுநர் ”பெறுமதி சேர் வரி விலக்கானது தேசிய ரீதியான கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ளமையால் சாதகமாக பரிசீலிக்கப்படவில்லை” என ஆளுநரின் செயலாளர் ஒப்பமிட்டு மாநகர சபைக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கல்லூண்டாய் குடியேற்ற மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கும் நோக்கில் கலந்துரையாடல்!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாண. மாவட்டத்தின் கல்லுண்டாய் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கிலான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் 20ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை (20.02.2026) காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கல்லுண்டாயில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் ஒவ்வொரு மழைக் காலத்திலும் வெள்ளப் பெருக்குக் காரணமாக இடம்பெயரும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இதற்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், இது தொடர்பில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினரால் விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும், தற்போது நிலம் நிரவுதல் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின்போது, அருகிலுள்ள கொத்துக்கட்டிக்குளத்தைத் தூர்வாரி, அங்கிருந்து பெறப்படும் மண்ணைப் பயன்படுத்தி கல்லுண்டாய் குடியேற்றப் பகுதியில் நிலம் நிரவுதல் வேலைகளை முன்னெடுப்பது குறித்தும், குடியேற்றத் திட்டத்துக்கு அண்மையாகச் செல்லும் வாய்க்காலைத் தூர்வாருவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. மேலும், கொத்துக்கட்டிக்குளத்தைத் தூர்வாரியதன் பின்னர், எதிர்காலத்தில் அதன் பராமரிப்புப் பணிகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையிடம் கையளிப்பது தொடர்பான யோசனையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.



இவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் என்பன ஒன்றிணைந்து ஆராய்ந்து, அதற்கான துரித திட்ட மதிப்பீட்டு முன்மொழிவை விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கில் மக்களின் காணிகளை விடுவிக்க வனவள திணைக்களம் மறுப்பதை ஏற்க முடியாது என திட்டவட்டமாகத் தெரிவித்த வடக்கு ஆளுநர்!

மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்களுக்கான ஆவணங்கள் இல்லையென்பதைக் காரணங்காட்டி, அக்காணிகளை விடுவிக்க வனவளத் திணைக்களம் மறுப்புத் தெரிவிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மாவட்டச் செயலகத்தால் பரிந்துரைக்கப்படும் காணிகளை வனவளத் திணைக்களம் முழுமையாக விடுவிக்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது காலாண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான கௌரவ இ.சந்திரசேகர் மற்றும் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் 25ம் திகதி அன்று புதன்கிழமை காலை (25.02.2026) கிளிநொச்சி மாவட்டச் செயலகத் திறன் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வரவேற்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். கல்மடுக் குளத்திலிருந்து பெறப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட மணல், தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் ஊடாக மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், கடந்த “டித்வா” பேரிடரின் பின்னர் இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் வெளியேறிய ஆற்றுப் பகுதிகள், அக்கராயன் மற்றும் கல்லாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளில் குவிந்துள்ள மணலை பிரதேச சபைகள் ஊடாகச் சேகரித்து மக்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, கிளிநொச்சியிலுள்ள 5 குளங்களில் மண்ணைக் கழுவுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் சுமார் 15,000 கியூப் மணல் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதனூடாக இரு மாவட்டங்களினதும் எதிர்கால மணல் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது உரையாற்றிய கௌரவ அமைச்சர் இ.சந்திரசேகர், நடப்பு ஆண்டில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ள நிலையில், அவற்றை வினைத்திறனுடன் செலவிடுவதற்கான போதிய கால அவகாசம் காணப்படுவதால், அபிவிருத்திப் பணிகளை மிகச் சிறப்பாகவும் துரிதமாகவும் முன்னெடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான பல்வேறு விடயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி, மீள்குடியேற்ற அமைச்சின் ஊடான வீட்டுத் திட்டங்கள், கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைக்கப்பட வேண்டிய பாலங்களின் முன்னுரிமைப் பட்டியல், இடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் சமூக சக்தி வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான அனுமதிகள் கோரப்பட்டபோது, கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் இ.அருச்சுனா, பொ.கஜேந்திரகுமார் மற்றும் பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். அதேவேளை, வன்னேரிக்குளம் சுற்றுலா அபிவிருத்தி, கௌதாரிமுனையில் காணி வழங்கல் மற்றும் பொருளாதார மத்திய நிலையக் கடைகள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களுக்குக் குழுவினால் அனுமதி வழங்கி வைக்கப்பட்டது.



வனவளத் திணைக்களத்திடமிருந்து 10,821 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், வெறுமனே 1,088 ஏக்கர் காணியை மாத்திரமே விடுவிக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பில் சுட்டிக்காட்டிய மாவட்டச் செயலாளர், கோரப்பட்ட முழுமையான 10,821 ஏக்கர் காணியையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திய நிலையில், அக்கோரிக்கைக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதி வழங்கியது. வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான முழுமையான விவரங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்காலக் குடிநீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு, இரணைமடுக் குளத்திலிருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியும் ஒருங்கிணைப்புக் குழுவால் வழங்கப்பட்டது. அத்துடன், கிளிநொச்சி நகர்ப்புறக் குளங்களின் ஒதுக்கீட்டுக் காணிகளை ஆக்கிரமித்துள்ளவர்களைச் சட்டபூர்வமாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. மேலும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கும், சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைப் பிரித்து மீளமைப்பதற்கும் ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை ஒழுங்குபடுத்துவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அருச்சுனா இராமநாதன் ஆகியோரும், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைகளின் கௌரவ தவிசாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1185



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

*" நாளென் செயும் வினைதானெனென் செயுமெனை நாடிவந்த*
*கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு*
*தாளுஞ் சிலம்பும் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்*
*தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே."*

இலங்கையின் தலைநகராக விளங்கும் கொழும்பு மாநகரின் மத்தியில், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக, பம்பலப்பிட்டி என்னும் இடம் காணப்படுகின்றது. இப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் வரலாற்றுச்சிறப்புடன் கலைநயம் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஆலயங்களுள் பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயிலும் அடங்கும். இக்கோயில், காலத்திற்குக் காலம் இன்னல்களை அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் இடமாகவும், இந்து பாரம்பரியத்தின் தொன்மையை மக்களுக்கு உணர்த்தும் இடமாகவும் விளங்குகின்றது. கொழும்பு நகரிலே வாழ்வோரையும், வாழ்வுதேடி வருவோரையும் காத்து வாழ்வளிக்கும் இவ்வாலயங்களின் வரலாறு, பரந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் அடையாளமாகக் காணப்படுகின்றது.

இலங்கையும், இந்தியாவும் இருவேறு நாடுகளாக இருந்தபோதிலும் சமய, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களில் பொதுப் பாரம்பரியத்தைக் கொண்டவையாக விளங்குகின்றன. ஆதிகாலந்தொட்டு வியாபாரநோக்கோடு தமிழகத்திலிருந்து மக்கள் ஈழத்திற்கு வருவதும், ஈழத்திலுள்ள மக்கள் இந்தியா செல்வதும் இன்றும் தொடர்கின்றது. இந்தவகையிலே திரைகடலோடியுந் திரவியந் தேடு என்ற நோக்கோடு, தமிழகத்திலிருந்து ஈதல், காத்தல், வகுத்தல் என்ற பண்பாடுடைய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், ஈழத்திற்கு வியாபார நோக்கோடு வருகை தந்தனர். இம்மக்கள் இறையுணர்வும், பக்திப்பெருக்கும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். தாம் சென்ற இடமெல்லாம் ஆலயங்களையும், மடங்களையும், கல்விக்கூடங்களையும் நிறுவிப் போற்றி வளர்த்தமை இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றது.

வர்த்தக நோக்கொடு இலங்கைக்கு வந்து குடியேறிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், தாம் பிறந்து வாழ்ந்த இடத்திலே வணங்கிய தெய்வங்களுக்கு, தாம் குடியேறிய புதிய இடங்களிலும் ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்து வரலாயினர். 1839 ஆம் அண்டு கொழும்பிலுள்ள செட்டியார் தெருவில், புதிய கதிரேசன் கொயிலை அமைத்தனர். அக்காலந் தொட்டு இன்றுவரை இம்மக்களின் அயராத முயற்சியாலும், தெய்வீக நாட்டத்தினாலும் கொழும்பு மாநாகரின் பிரபலமான அருள்மிக்க ஆலயமாக கொழும்பு செட்டியார்தெரு புதிய கதிரேசன் கோயில் காணப்படுகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்புவரை, ஈழத்திலே மோட்டார் வாகனங்களின் பாவனை காணப்படவில்லை. இக்காரணத்தினால் நீண்டதூரம் பிரயாணம் செய்வோர், மாட்டுவண்டிகளையே பயன்படுத்தி வந்துள்ளனர். போக்குவரத்து வசதிகள் வளாச்சியடையாத அக்காலத்தில், கதிர்காமக்கந்தனைத் தரிசிப்பதற்காக இந்துக்களும், ஏனையோரும் கால்நடையாகக் கதிர்காமம் செல்வது வழக்கம். கதிர்காமத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி, ஆடிமாதம் பௌர்ணமி தினத்திலே தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், விழா ஆரம்பிப்பதற்கு ஒரு மாதம் முன்னதாகவே காவடி எடுத்து, பாதயாத்திரையாகக் கதிர்காமம் செல்வது வழக்கம். இவ்வாறு செல்லும் வேளைகளில் பல்வேறு இடர்களைச் சந்தித்தே கதிர்காத்தை அடையவேண்டிய நிலை காணப்பட்டது. கதிர்காமக்கந்தன்மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தினால், இடர்களையெல்லாம் துடைத்தெறிந்து வேழமுகன் தம்பியே சரணம், கதிர்காமக்கந்தா சரணம் என்ற பக்தி வைராக்கியத்தோடு பயணத்தைத் தொடர்வார்கள்.

நாளடைவில் இவ்வாறான பாதயாத்திரையில், பல்வேறு இன மக்களும் கலந்துகொண்டார்கள். இவ்வாறானநிலையிலே அக்காலத்தில் கொழும்பில் கொடிய வைசூரிநோய் பரவியிருந்தது. அப்பொழுதிருந்த அரசஅதிபர், கொழும்பில் வாழ்ந்த மக்களை இந்நோய் தாக்காதிருக்கவும், கொழும்பிலிருந்து இத்தொற்றுநோய் வேறிடங்களுக்குப் பரவாதிருக்கவும், கொழும்பிலுள்ள மக்கள் வேறிடங்களுக்குச் செல்வதற்குத் தடை விதித்தார். இந்நோய் பரவிய காலப்பகுதி, கதிர்காம யாத்திரீகர்கள் கதிர்காமம் செல்லும் காலமான காரணத்தால், யாத்திரிகர்கள் தமது யாத்திரையைத் தொடரமுடியாத நிலை காணப்பட்டது.

ஆயினும், யாத்திரையைத் தொடர்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரையும், ஏனைய குழுவினரையும் பம்பலப்பிட்டி ஊடாகச் செல்லும்பொழுது தடுத்து நிறுத்தினர். அவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்ட இடத்திலே மூன்று இந்துக்கோயில்கள் எழ இந்நிகழ்ச்சி காரணமாக அமைந்தது. யாத்திரை தடைப்பட்டதைப் பொறுக்கமுடியாத பக்தர்கள், தமது காவடிகளுடன் தற்காலத்தில் கோயில்களாகக் காணப்படும் காணிகளில், காவடிகளை இறக்கிவிட்டு, முருகப்பெருமான்மீது பழியைப்போட்டுவிட்டு தமது வீடுதிரும்ப எண்ணங் கொண்டனர்.

இவர்கள் வேதனையைப் போக்க எண்ணங்கொண்ட கந்தவேள், அன்பர் ஒருவர் கனவிலே தோன்றி, கதிர்காமம் செல்ல முடியாவிட்டாலும் வருந்தாது, இனி வருங்காலங்களில் கொழும்பிலேயே இவ்விழாவை நடத்தி, அங்கு வாழும் மக்களுக்கு இவ்விழாவின் மகிமையை எடுத்துணர்த்துமாறு கூறி மறைந்தார்.

**வளரும்..**



## உக்ரைனியர்களின் மன உறுதியை ரஸ்யாவின் புட்டினால் உடைக்க முடியவில்லை என்கிறார் உக்ரைனை தேசத்தின் அதிபர் ஜெலன்ஸ்கி

உக்ரைன் மீது 2022ம் ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி ரஷியா போர் தொடுத்தது. இந்த போர் தொடங்கி இன்றுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார்.

போர் நிறுத்தம் தொடர்பாக பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், ஒரு சில நிபந்தனைகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்து இரு நாடுகளுக்கு இடையே போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், உக்ரைன் - ரஷியா போர் தொடங்கி இன்றுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் ஐரோப்பிய யூனியனை சேர்ந்த அதிகாரிகள் இன்று உக்ரைன் சென்றுள்ளனர். உக்ரைனுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் இந்த பயணத்தை மேற்கொண்டனர். ஐரோப்பிய யூனியன் அதிகாரிகளை உக்ரைன் அதிபர் விளாடிமரி ஜெலன்ஸ்கி சந்தித்தார். இதன் பின்னர் ஜெலன்ஸ்கி சமூகவலைதளத்தில் தளத்தில் வெளியிட்ட பதிவ-ில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தபோதும் உக்ரைனியர்களின் மன உறுதியை ரஷிய அதிபர் புதினால் உடைக்கமுடியவில்லை. ரஷியாவால் இந்த போரில் வெற்றிபெற முடியவில்லை. ரஷியாவின் மிகப்பெரிய ராணுவம் மற்றும் அதிநவீன ராணுவ உபகரணங்களின் தாக்குதலை உக்ரைன் எதிர்த்து நிற்கிறது. போர் தொடங்கியதுமுதல் இன்றுவரை பார்க்கும்போது நாங்கள் எங்கள் சுதந்திர நாட்டை பாதுகாத்தோம் என்று கூற எங்களுக்கு உரிமை உள்ளது. எங்கள் நாட்டை நாங்கள் இழக்கவில்லை. ரஷிய அதிபர் புதின் தனது போரின் நோக்கத்தை அடையவில்லை. அவர் இந்த போரில் வெற்றிபெறவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நடிகர் சிவகார்த்திகேயன் தயாரிப்பிலும் அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்திலும் உருவாகும் திரைப்படம் "தாய் கிழவி"



நடிகர் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் "தாய் கிழவி." ராதிகா சரத்குமார் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ள தாய் கிழவி திரைப்படம் வருகிற 27ஆம் தேதி வெளியாகிறது.

இதையொட்டி இந்தப் படத்தின் பிரீ-வெளியீடு நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய இயக்குநர் சிபி சக்ரவர்த்தி, "சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் படம் (தலைவர் 173) ஏப்ரல் மாத மத்தியில் தொடங்கும். நான் ஒரு கிராமத்திலிருந்து வருகிறேன், சிவகார்த்திகேயன் போன்ற ஒரு ஹீரோவை இயக்குவது ஒரு கனவாக இருந்தது. நான் முதலில் அவரிடம் ஒரு கதையைச் சொன்னபோது, அவர் அதை நிராகரித்தார். பின்னர் நான் பல ஹீரோக்களை அணுகி இறுதியில் அவரிடம் திரும்பினேன். இந்த முறை அவர் அதை ஏற்றுக்கொண்டார்.

அப்போதிருந்து, அவர் எனக்கு ஒரு பெரிய ஆதரவாக இருந்து வருகி-றார். எதிர்மறையான கட்டங்களில் கூட, அவர் என்னுடன் நின்றார். கடந்த டிசம்பரில் நான் "தாய்கிழவி" படத்தை பார்த்தேன், ஒரு விஷயம் என்னைத் தாக்கியது. இது ஒரு அற்புதமான படம், இயக்குநர் சிவா அதை மிகவும் எளிதாக கையாண்டுள்ளார். ஒரு வலுவான கிராமப்புறக் கதை வந்து சிறிது காலம் ஆகிவிட்டது, இது நிச்சயமாக அந்த ஒன்றாக இருக்கும். ராதி-கா மேடம் தான் அந்த பெண் கமல்ஹாசன். இதற்காக அவர் நிச்சயமாக தேசிய விருதை வெல்வார்," என்றார்.

## “America and Americans are not Canada’s trading enemies, at the same time, China has proven it is no one’s ally.” - Canada’s Conservative Leader Poilievre



# சீனா யாருடைய கூட்டாளியும் அல்ல! அதே நேரம். அமெரிக்காவும் அமெரிக்கர்களும் கனடாவின் வர்த்தக எதிரிகளும் அல்ல! கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லிவ்ரே அழுத்தமாகத் தெரிவிப்பு!

சீனா யாருடைய கூட்டாளியும் அல்ல என்பதை நிரூபித்துள்ள அதே நேரத்தில், அமெரிக்காவும் அமெரிக்கர்களும் கனடாவின் வர்த்தக எதிரி அல்ல. இதை நாங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் கனடாவின் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும். கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவருமான பொய்லிவ்ரே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “எவ்வாறு இருந்தாலும். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ச்சியாகக் கனடாவைத் தாக்குவது ”தவறு” என்றும், கனடாவின் நலன்களை முன்னேற்றுவதற்காக எமது தேசம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை சமாளிப்பதற்காகவும் பிரதமர் மார்க் கார்னியுடன் ”ஆக்கபூர்வமாக” பணியாற்ற நான் முன்வருகின்றேன்” என்றும் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரே தெரிவித்தார்.

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் அமைந்துள்ள பாராளுமன்ற வளாகத்தில் அவர் கனடிய தேசிய ஊடகங்களின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

முதன்முறையாக அமெரிக்க ஜனாதிபதியின் பெயரை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு கனடாவுடனான அவரது விரோத அணுகுமுறையை எதிர்கொண்ட ஒரு நீண்ட உரையில், பொய்லிவ்ரே கனடாவின் அமெரிக்காவுடனான ஆழமான வர்த்தக உறவுகள் மற்றும் இராணுவ கூட்டணியை மேற்கோள் காட்டி, சீனாவுடன் மிக நெருக்கமாக இணைவதற்கு எதிராக கனடியப் பிரதமமர் மார்ட கார்னியை எச்சரித்தார்.

மேலும் அவர் வழங்க விரும்பும் ஒத்துழைப்புக்கான முக்கிய அறிகுறிகளை குறிப்பிட்டார். அவரது கருத்துக்களின் முன்கூட்டிய நகலின்படி, பொய்லிவ்ரே கனடா-அமெரிக்கா-மெக்ஸிகோ ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதில் உதவுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனைத்துக் கட்சி பணிக்குழுவை அமைத்து அதில் பங்கேற்க முன்மொழிகிறார் - இரும்பு உருக்கு, அலுமினியம், உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் மரக்குற்றிகள் மீதான அனைத்து வரிகளையும் நீக்க வேண்டும் என்று பொய்லிவ்ரே வலியுறுத்தும் ஒரு ஒப்பந்தம் முக்கியத்துவம் பெறுகின்றது.

சீன வாகனங்களிலிருந்து வட அமெரிக்க கார் தயாரிப்பைப் பாதுகாக்க ஒரு புதிய பூஜ்ஜிய கட்டண ஆட்டோ ஒப்பந்தம், ”அமெரிக்காவை வாங்குவோம்” விதிகளிலிருந்து முழு விலக்கு மற்றும் கீஸ்டோன் ஓடு பைப்லைன் விரிவாக்கத் திட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டும் என்று கொன்சர்வேர்ட்டிவ் கட்சியினர் அழைப்பு விடுக்கின்றனர் - இவை அனைத்தும் எதிர்கால அமெரிக்க ”நிர்வாக விருப்புரிமையை” கட்டுப்படுத்த ”சட்டத்தோடு சேர்த்துக்கொள்ளவேண்டும்” என்றும், ஒருதலைப்பட்ச கட்டண உயர்வுகளை மிகவும் கடினமாக்க வேண்டும் என்றும் போயிலீவ்ரே அன்று தெரிவித்தார்.

கனேடிய துறைகளை வலுப்படுத்தவும், கனேடிய டிஜிட்டல், எரிசக்தி மற்றும் இராணுவ இறையாண்மையைப் பாதுகாக்கவும் பொய்லீவ்ரே அவர்கள் வேறு முக்கியமான பரிந்துரைகளை தனது உரையின் போது வழங்கினார். வள மேம்பாடு மற்றும் வீட்டுவசதி கட்டுமான ஒப்புதல்களை விரைவுபடுத்தவும், கனேடிய ஆயுதப்படைகளின் விரிவாக்கத்தை விரைவுபடுத்தவும், ஆர்க்டிக் பிராந்திய இறையாண்மையைப் பாதுகாக்கவும் பல நீண்டகால பழமைவாத கோரிக்கைகளை மீண்டும் முன்வைக்கின்றனர். என்று கூறிய கன்சர்வேடிவ் தலைவர் ”உள்நாட்டில், கனேடிய கட்டுப்பாட்டின் கீழ் சேமிக்கப்பட்டு, போர், நெருக்கடி அல்லது விநியோக இடையூறுகளின் போது நாட்டையும் நமது நட்பு நாடுகளையும் பாதுகாக்க கிடைக்கக்கூடிய” ஒரு புதிய மூலோபாய எரிசக்தி மற்றும் கனிம இருப்புக்கும் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

கனடாவின் ”டிஜிட்டல் இறையாண்மையை” வலுப்படுத்த தேவையான இதர திட்டங்களையும் பொய்லீவ்ரே குறிப்பிட்டார்.

மானியங்கள், வரிக் கொள்கை, அறிவுசார் சொத்து கட்டமைப்புகள் மற்றும் முதலீட்டு மறுஆய்வு சட்டங்களை சுட்டிக்காட்டி, கனேடிய தொழில்நுட்பங்கள் வணிகமயமாக்கப்படும் விகிதத்தை அதிகரிக்க மாற்றியமைக்கப்பட வேண்டும், ஆனால் நன்மைகள் கனேடிய கைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. வரி செலுத்துவோர் மானியத்துடன் கூடிய அறிவுசார் சொத்துக்களை கனடாவிலிருந்து வெளியே கொண்டு செல்பவர்கள் பொது பங்களிப்பை திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் பொய்லீவ்ரே எடுத்தரைத்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில். துணிகர முதலீட்டாளர்கள் மூலதன ஆதாயங்களை வரி இல்லாமல் கனடாவிற்குள் மீண்டும் முதலீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற தனது பிரச்சாரத்தின் பொது தெரிவித்ததை அவர் மீண்டும் வலியுறுத்தினார், மேலும் ”உணர்திறன் மிக்க அறிவுசார் சொத்து, தரவு, ஆயுத அமைப்புகள், குறியாக்கவியல் மற்றும் நவீன நெருக்கடிகளில் உயிர்வாழ்வதற்கான பிற முக்கிய கருவிகளை” வெளிநாட்டு சக்திகள் கையகப்படுத்துவதை தடை செய்ய விரும்புவதாகவும். சீனா யாருடைய கூட்டாளியும் அல்ல என்பதை நிரூபித்துள்ள அதே நேரத்தில், அமெரிக்காவும் அமெரிக்கர்களும் கனடாவின் வர்த்தக எதிரி அல்ல என்று பொய்லிவ்ரே தெரிவித்தார்.

உலக செய்திகள்
World News

# ”இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியுரிமை பெற்றுத் தரப் போராடுவோம்” என்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை வழங்கி வருகிறோம். நிரந்தரக் குடியுரிமையும் பெற்றுத் தரப் போராடுவோம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், “இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை வழங்கி வருகிறோம் நிரந்தரக் குடியுரிமையும் பெற்றுத் தரப் போராடுவோம். இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள், அவர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில 3 கல்வியாண்டுகளில் 5,771 மாணவர்களுக்கு 11.07 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகை, சுயஉதவிக் குழுக்களுக்கு நிதி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்டவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் பேணி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. நீண்டகாலமாக இந்திய மண்ணில் வசித்து வரும் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய குடியுரிமையை இந்திய அரசு விரைந்து வழங்கும் என எதிர்பார்க்கிறோம். அதுவரை நம் குரல் தமிழ்ச் சொந்தங்களுக்காகத் தொடர்ந்து ஒலிக்கும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.



# நான் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன் என்பது எனக்குத் தெரியவில்லை — கொலை முயற்சி குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப்

அமெரிக்காவின் புளோரிடாவில் அதிபர் டிரம்ப் உடைய இல்லத்திற்குள் கடந்த பிப்ரவரி 22 அதிகாலை 1:30 மணியளவில் இளைஞர் ஒருவன் ஷாட்கன் துப்பாக்கி மற்றும் பெட்ரோல் கேனுடன் நுழைய முயன்றான். எச்சரிக்கை விடுத்தும், அவன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதால், சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்டுகள் அவனைச் சுட்டுக்கொன்றனர். இந்த சம்பவத்தின் போது டிரம்ப் மற்றும் அவரது மனைவி வெள்ளை மாளிகையில் இருந்தனர். அந்த இளைஞன் 21 வயதான ஆஸ்டின் டக்கர் மார்ட்டின் என்று அடையாளம் காணப்பட்டான்.

இந்தச் சம்பவம் குறித்து வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய டிரம்ப், ”நான் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன் எனத் தெரியவில்லை. எனக்காகத் துப்பாக்கியுடன் எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்று பார்த்தீர்களா?” என்று நகைச்சுவையாக வினவினார். மேலும், ”ஆபிரகாம் லிங்கன், கென்னடி போன்ற மிகப்பெரிய செல்வாக்குள்ள தலைவர்களையே இதுபோல இலக்கு வைப்பார்கள். ஒருவேளை நான் கொஞ்சம் குறைவான செல்வாக்குள்ள தலைவராக இருந்திருக்கலாமோ என்னவோ? கொஞ்ச காலம் ஒரு சாதாரண அதிபராக இருக்க முயற்சிப்போம்” என்றும் அவர் கிண்டலாகப் பேசினார். கொல்லப்பட்ட இளைஞன் மார்ட்டின், சமீபத்தில் வெளியான எப்ஸ்டீன் கோப்புகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருந்தது அவனது குறுஞ்செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

டிரம்ப் மீது ஏற்கனவே இரண்டு முறை கொலை முயற்சிகள் நடந்துள்ள நிலையில், இந்த மூன்றாவது முயற்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# ”ஓ பட்டர்பிளை” திரைப்படம் மார்ச் 6ம் திகதி அன்று வெளியீடு

ஆண்ட்ஹில் சினிமா மற்றும் பாலம்பூர் டாக்கீஸ் இணைந்து தயாரித்துள்ள படம் “ஓ பட்டர்பிளை“. விஜய் ரங்கநாதன் எழுதி இயக்கி உள்ள இப்படத்தில் நிவேதிதா சதீஷ், சிபி, நாசர், லட்சுமி பிரியா, சந்திர மௌலி, கீதா கைலாசம் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். கணவன், மனைவிக்குள்ளான காதல் மற்றும் திகில் கலந்த கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படத்திற்கு வைசாக் சோமநாத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் முதல்காட்சி மற்றும் முன்னோட்டம் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது. முன்னோட்டம் ஏற்கனவே வெளியான நிலையில் டிரெய்லர் நாளை வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், “ஓ பட்டர்பிளை“ படம் வருகிற 6-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என பதாகை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

# இவ்வார ராசிபலன்

**27-02-2026 வெள்ளி தொடக்கம் 05-03-2026 வியாழன் வரையும்**

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையக்கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீர்கள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோ'ம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்ப வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை.

(தொடர்ச்சி 23 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(22 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L

**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R

**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,U

**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வாழ்த்துக்கள் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,U

VILLA KARUNA HOME FOR SENIORS HELPING HANDS
சந்தியாராகம் Santhiyaragam

VILLA KARUNA HOME FOR SENIORS
Proudly Presents
Santhiyaragam
GOLDEN SUPER SINGER
Season 8
AUDITION




DATE: SUNDAY, MARCH 8, 2026
TIME: 10:00 AM – 2:00 PM
VENUE: 7340 MARKHAM ROAD, MARKHAM
REGISTER BEFORE MARCH 5, 2026
Inthu – 416-282-4535 | Kiruba – 416-564-4366 | Indrani – 416-200-6971

Calling all 55+ years old!
Come showcase your voice and be part of this exciting musical journey!

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION. BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)

உதயம் 1560 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 27, 2026



# மார்க்கம் நகரில் தனது இரண்டாவது கிளையை திறந்து வைத்த ஸ்காபுறோ HiFi Barbershop தொழிலகம்!



ஸ்காபுறோ நகரில் மார்க்கம்- மெக்னிக்கல் வீதி சந்திப்புக்கு அருகில் தனது தலைமைத் தொழிலகத்தை சிறப்பாக நடத்திவரும் **HiFi Barbershop** தொழிலகத்தார் தமது இரண்டாவது கிளையை மார்க்கம் நகரில் **8 Shadlock Street Unit 4, Markham (SteelEs/ Shadlock)** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் கடந்த22ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கோலாகலமாக திறந்து வைத்தனர்.

அன்றைய தினம் ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார அமைச்சின் இணையமைச்சரான விஜேய் தணிகாசலம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தொழிலகக் கிளையை திறந்து வைத்தார்.

பல ஊடக நண்பர்கள் மற்றும் வர்த்தக நண்பர்கள் என பலரும் கலநது கொண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து சென்றனர்.

புதிய கிளையின் தொலைபேசி இல்ககம்: 437 243 1719 ஆகும்! படங்கள்: ரவி அச்சுதன்

# Premier Doug Ford wants to amalgamate Niagara's 12 cities and towns!

# நயாகராவில் 12 நகரங்கள் அடங்கிய பிராந்தியத்தை இணைத்து 100 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபையாக தரமுயர்ததவுள்ளதாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அறிவிப்பு!



நயாகர பிராந்தியத்தில் உள்ள 12 நகரங்கள் மற்றும் சிறிய நகரங்கள் அடங்கிய பிராந்தியத்தை 100 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபையாக தரமுயர்ததவுள்ளதாக ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்.

இவ்வாறு இணைக்கும் போது ரொறன்ரோவின் 26 வட்டாரங்களை விட 100 நயாகரா நீர்வீழ்ச்சி பிராந்தியம் 100 கவுன்சிலர்களையும் 100 வட்டாரங்களையும் கொண்ட ஒரு நயாகரா நகராட்சியாக மாறி பலம் பொருந்தியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். இந்தப் பிராந்தியம் மக்கள் தொகையில் குறைந்ததாக இருந்தாலும் அதிக வருமானம் கிடைக்கும் மாநகர சபையாக எழுந்துநிற்கும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# இனப்படுகொலையாளி ராஜபக்சாவின் புதல்வன் நாமல் ராஜபக்ச இங்கிலாந்தில் உரையாற்றுவதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முழுமையான வெற்றி!



பிரித்தானியாவின் புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களான கேம்பிரிட்ஜ் மற்றும் ஓக்ஸ்போர்ட் யூனியன்களில் **(Cambridge & Oxford Unions)** இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் இனப்படுகொலையாளி ராஜபக்சாவின் புதல்வனுமாகிய நாமல் ராஜபக்ச உரையாற்றுவதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் முழுமையான வெற்றியைப் பெற்றுள்ளன.

இந்தநிலையில் அவருக்கு ஆதரவாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு எதிராகவும் சில ராஜபக்ச ஆதரவாளர்கள் தங்களுடைய கருத்துக்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். எனினும் தமிழ் மக்கள் மட்டுமல்லாது சிங்கள் மக்களும் நாமல் ராஜபக்சவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை முக்கிய விடயமாக பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் ராஜபக்சாவின் குடும்பத்தினருக்கு மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# பிரபாகரனும் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவும்!

விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் இல்லாமல் இலங்கையில் எந்தவொரு சிங்களக் கட்சியோ சிங்கள அரசியல் தலைவரோ அரசியல் செய்ய முடியாது ,அரியணை ஏற முடியாது என்பது எழுதப்படாத விதி.அந்தளவுக்கு விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாகவும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை பிரிவினைப் போராட்டமாகவும் சித்திரித்து இனவாதம், மதவாதம் மூலம் சிங்கள மக்களை உசுப்பிவிட்டு அரசியல் ஆதாயம் தேடும் ஒரு இழி அரசியலைத்தான் இந்த சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள அரசியல் தலைவர்களும் அன்று முதல் இன்றுவரை முன்னெடுத்து வருகின்றனர்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)




# "கல்கி 2898ஏடி" 2 படப்பிடிப்புத் தளத்தில் அமிதாப் பச்சனை சந்தித்த நடிகர் கமல்



அமிதாப் பச்சன், கமல்ஹாசன், பிரபாஸ், தீபிகா படுகோன் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான "கல்கி 2898 ஏடி" திரைப்படம் உலகமெங்கும் ரூ.1100 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனை படைத்தது.

பிரம்மாண்ட பொருட்செலவில் எடுக்கப்பட்ட இப்படத்தை நாக் அஸ்வின் இயக்கியிருந்தார். மகாபாரத யுத்தமான குருசேத்திரம் நடந்து 6000 வருடங்களுக்கு பிறகு நடக்கும் கதையாக இப்படம் எடுக்கப்பட்டது. சந்தோஷ் நாராயணன் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார். தற்போது "கல்கி 2898 ஏடி" 2 ஆம் பாகத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இந்த பாகத்தில் கமல்ஹாசனின் யாஸ்கின் என்ற வில்லன் கதாப்பாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், "கல்கி 2898ஏடி" 2 படப்பிடிப்புத் தளத்தில் அமிதாப் பச்சனை கமல்ஹாசன் சந்தித்தார். அமிதாப் பச்சன், கமல்ஹாசனுக்கு இடையேயான காட்சிகள் தற்போது படமாக்கப்பட்டு வருகிறது. "கல்கி 2898ஏடி" 2 ஆம் பாகம் 2028 ஆம் ஆண்டு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"சந்தியாராகம்"
பாடல் போட்டி -2026 இற்கான
AUDITION மார்ச் 8ம் திகதி
மார்க்கம் நகரில் நடைபெறவுள்ளது.
For registration,
call 416.564.4366 or 416.200.6971